www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 10.02 திருவள்ளுவர் ஆண்டு 2053
14.10.2022 - 13.11.2022
ISSN : 2195-6480



FREE Magazine

## ஈழத் தமிழர்களின் தீர்வு எதுவாக இருக்க முடியும்?

## என்று ஒழியும் இந்தக் கொடுமை?

## சோழப்படை வேந்தன்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

# Dortmund மாநகரில் மளிகை உலகின்

BIGG BOSS

TKS BEST FOODS




V BOX

~~149€~~ பெறுமதியுள்ள

119€* கிடைக்கும்

7ஆம் ஆண்டு நிறைவு விழா மற்றும் தீபாவளி பண்டிகை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி விற்பனை

## மலிவும் தரமும் என்றும் உங்கள் TKS

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

Haldiram's · Aachi · Elephant House · GRB · TRS · Tilda · Maliban · MTR



Rheinische Str.79-44137-Dortmund

tksbestfoods

0049 231 950 468 83

www.tksbestfoods.de

tks-bestfoods@web.de




ortel MOBILE




## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to
20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the
Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***




## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU


Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the
Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***




## 11 GB Internet Flat

Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the
Ortel Mobile app
(offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***




**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play · App Store

Aufladbar mit: ortel MOBILE O2 e-plus




AKARAM

# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 புரட்டாசி 2022 - 13 ஐப்பசி 2022

சுவடி / ISSUE 10.02



**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

அகரம் 12 ஆண்டு

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும் விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் நன்றியும், வளமான, நலமான வாழ்வும் கிடைக்க அகரம் இறைவனை இறைஞ்சுகிறது.**

13 ஆண்டுகளாக ஈழத் தமிழரின் இன அழிப்பும், அதற்கான நீதியும், பொறுப்புக் கூறலும் தொடு வானம் போல கைகளுக்கும், கண்களுக்கும் எட்டாத தொலைவில் கண்ணாமூச்சிக் காட்டிக் கொண்டே போகிறது. ஆண்டுக்கு மார்ச், செப்டெம்பர் என இரு தடவைகள் எங்கள் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஜெனீவாவுக்குக் காவடி ஆடி வந்து, வீதிகள் வலம் வந்து, சர்வதேச நாடுகள் முன் துதி பாடிவிட்டுப் போவதே வழக்கமாகி விட்டது.

உலக நடப்பைப் பற்றிய அறிவு சிறிதும் இல்லாமல், ஆளை ஆள் குறை சொல்லி, ஒருமித்த கோரிக்கை எதனையும் வைக்காமல் ஊடகங்களில் அறிக்கைகளை வெளியிட்டு, திருப்தி அடைவதோடு அவர்களின் வாழ்நாள் சாதனை முடிந்து விடும்.

மனித உரிமை ஆணையாளர்கள் லூயிஸ் ஆபர் தொடக்கம், இன்று உள்ள மிச்செயில் வரை மேலும் பல வெளிநாட்டுப் பிரபலங்கள் எமது பாவப்பட்ட நிலை கண்டு, எல்லாச் செயற்பாட்டாளர்களையும் தமிழ் மக்கள் சார்பாக ஒத்த ஒருமித்த கோரிக்கை வைத்து, சர்வ தேசத்தின் கவனத்தைப் பெறுவதன் மூலமே எம் இனத்தின் நிலையான தீர்வைக் காண முடியும் என வலியுறுத்தினாலும், எமது இனத்தின் சாபக்கேடு அத்தகைய நிலைப்பாட்டை ஏற்படவிடாமல் காட்டிக் கொடுப்போரின் கைகள்

டாக்டர் யூட் லால் பெர்னாண்டோ



மேலோங்கி இலங்கை, இந்திய அரசுகளின் சூழ்ச்சிகளால் எந்த முடிவையும் தமிழ் இனம் பெறமுடியாமல் அழிக்கப்பட்டு வருகிறது.

"ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது" என்பது போல, உலகம் தனது போக்கில் ஓடிக் கொண்டிருக்கிறது. எமக்கு அவசியமான முக்கிய சாட்சியங்கள் மரணம் மற்றும் திட்டமிட்ட அழிப்புகளால், சர்வதேசக் குற்றவியல் வழக்கு இடம்பெறும் நாள் ஒன்று வருமாயின், முக்கியமான சாட்சியங்கள் முன்வைக்கப்படாத அவலம் காத்திருப்பதை யாரும் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

ஐ.நா.விடம் சமர்ப்பித்த முக்கிய ஆவண சாட்சியங்களை, அங்கு கடமையாற்றிய தமிழ் பெண்மணி ஒருவர் காணாமல் செய்து விட்டார் என்கிற செய்தி சில வருடங்களுக்கு முன்னர் வெளியாகி இருந்தது.

பல புலிகள் இயக்கப் போராளிச் சாட்சிகளும், உயிர் இழந்து விட்டார்கள் என்கிற செய்திகளும் உள்ளன. போகிற போக்கில் 100 வருடங்கள் ஆனாலும், எமக்கான நீதியை நாம் பெற முடியுமா? என்பது சந்தேகமே!.

நல்வாய்ப்பாக பேராசிரியர் டாக்டர் யூட் லால் பெர்னாண்டோ ***(Jude Lal Fernando)*** என்பவர், நிரந்தர மக்கள் தீர்பாயங்கள் மூலம் இலங்கை, இந்திய பிரித்தானிய அரசுகளின் ஈழத் தமிழ் இன அழிப்புக் குற்றங்களைத் தீர்ப்பாயங்கள் மூலம் தீர்ப்புகளைப் பெற்றுத் தந்தார்.

வேறு பல நாடுகளிலும் மக்கள் நிரந்தரத் தீர்ப்பாயங்களை நிறுவி, எமது தரப்பு வாதங்களை உலக அரசுகள் மத்தியில் பிரச்சாரப் படுத்தி, எமக்கான நீதியை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலும் தேட முடியும். மக்கள் தீர்ப்பாயங்களை நிறுவி, சட்ட வல்வலுனர்களின் வாதப் பொருளாக்கினால், எம் இனத்தின் நியாயத்தை உலக அரசுகள் மத்தியில் பேசு பொருளாக்கி விட்டால், எம் இனத்தின் ஒற்றுமை இன்மை என்கிற குறையைப் போக்க முடியும்.

இந்தப் பாரிய பணியை, நாடு கடந்த தமிழீழ அரசு தனது தலையாய கடனான எடுத்துச் செய்ய வேண்டும். குறுக்கு வழியில் நாட்டின் அதிபர் பதவியைப் பிடித்து விட்ட ரணில் விக்கிமசிங்கவை, நிரந்தர அதிபராக நிறுத்த உலக நாடுகள் முற்படுவதாகச் செய்திகள் வருகின்றன.

இதிலே ஈழத் தமிழரின் கடலுக்கடி பெற்றோலியம் உள்ளிட்ட கனிம வளங்களைப் பெறுவதற்காக புலிகள் அமைப்பையும், தமிழ் இனத்தையும் அழிக்கப் போரை பயன்படுத்திய நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக் சோல்கைம், மீண்டும் இலங்கை வந்து ரணிலையும், மகிந்த கூட்டத்தையும் சந்திப்பது ஈழத் தமிழரின் வருங்காலத்தை அச்சுறுத்தும் நிகழ்வாகவே தெரிகிறது.

ஈழத் தமிழ் இன அழிப்பில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்த சீன அதிபர் லீ பிங், கடந்த சில வாரங்களாக வீட்டுச் சிறையில் இருப்பதாகச் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

மீண்டும் வரும் வரை விடை பெறும்...

**ஆசிரியர்,** **அகரம் குழுமம்**




த. எதிர்மன்னசிங்கம்





# கொட்டைப் பாக்கின் விலையும் வட்டுக்கோட்டைக்கு வழியும்...

**50ஆண்டுகளுக்கும் மேலாக இவர்கள் கேட்ட தமிழர்களின் அரசியல் கோரிக்கைகள் என்ன**

**இன்றும் ஐ.நா. மற்றும் மனித உரிமை ஆணையத்திடம் ஈழத் தமிழர் தரப்பு வைக்கும் கோரிக்கைகள் என்ன**

?

75 ஆண்டுகளுக்கு முன்னர், 1956ம் ஆண்டு சூலை மாதம் அன்றைய இலங்கையின் பிரதமர் சொலமன் றிட்வே டயஸ் பண்டார நாயக்கா என்கிற என்கிற வெஸ்லியன் கத்தோலிக்க மதக் குடும்பத்தில் பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து, பிரித்தானியா ஒக்ஸ் போட்டு பல்கலைக் கழகத்தில் வெள்ளி பதக்க பேச்சாளர் எனப் புகழ் பெற்ற உயர் சாதி சிங்களவர் பிரதமராகப் பதவி ஏற்றார்.

அவர் பிரதமர் ஆகிய நாள் 1956 தொடக்கம், தமிழரின் உடைமைகள், உரிமைகள், பூர்வீகத் தாயகமும், உயிர்களும் அழிக்கப்பட்டு 2022லும் தமிழ் இன அழிப்பும், சிங்களப் பௌத்த பயங்கரவாதமும் உலகறிந்த விடயமாக மாறி இருக்கிறது. ஆனால், இன்னமும் தமிழரின் பிரச்சினைகள், அரசியல் கோரிக்கைகள், வட்டுக்கோட்டைக்கு வழி கேட்பதும், கொட்டைப் பாக்கு விலை பற்றியும் பேசப் படுகிறதே ஒழிய, வியாபாரம் முடிவதாக காணப்பட வில்லை.


13 வருடங்களாக ஐ.நா மனித உரிமை ஆணைச் சபையில் பேசு பொருளாக உள்ள தமிழர் பிரச்சினை, கொட்டைப் பாக்கு வியாபாரம் போல இழுக்கப்பட்டு, தமிழர்களைப் பயங்கரவாதிகளாகவும், சிங்கள மக்களைத் தமிழ் மக்கள் வறுத்து

எடுக்கிறார்கள் எனவும், அகில உலகமே சிங்கள ஆட்சி யாளரை காப்பாற்றும் பொறுப்பைச் சுமப்பதாகவும், வட்டுக் கோட்டைக்குப் போகும் வழியைக் கண்டறியத் தவிப்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

தமிழ் மக்களின் தேவையும் கோரிக்கையும் என்னவெனத் தெளிவாக அறுதியாக, உறுதியாகத் தெரியாத தமிழர் தலைமை, 1915இல் சேர்.பொன. இராமநாதன் காலம் தொடக்கம், சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன் காலமான 2022 தரகு அரசியல் பேரங்களைச் செய்து கொண்டிருப்பதையும் நாம் காண்கிறோம்.

இலங்கைச் சிங்கள பௌத்த ஆட்சியாளரின் மண்டைகளுக்குள் அநகாரிக தர்மபாலா என்கிற விசரனின் விவேகம் இல்லாத, நாசகார அரசியல் சித்தாந்தமும், பொய்கள், புரட்டுகள் நிறைந்த 'மகா வம்சம்' என்கிற புத்த மதத் புரளிகளைக் கொண்ட சாசனங்களின் வக்கிர சிந்தனைகள் கோட்பாடுகளால் நாடு நாசமானதை யாரும் பேசுவது கிடையாது.

இலங்கை சுதந்திரம் பெற முன்னமே காணிகள், நீர்ப்பாசன அமைச்சராகவும், தனிச் சிங்கள அமைச்சரவையின் பிரதமரான கிழக்கு மாகாணத்தின் தமிழர் தாயகப் பூர்வீக நிலங்களில் சிங்களக் காடையர்களைக் குடியமர்த்திய டீ.எஸ்.சேனா நாயக்க, நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் முதல் பிரதமராகவும், தேச பிதாவாகவும் மாற்றம் பெற்ற போது, தமிழர் தலைவர்கள் எதிர்ப்பே இல்லாமல் அடிமைகளாக அரசியல் செய்து, தமிழின அழிப்பை அனுமதித்து, ஆதரவும் கொடுத்தனர்.



**அநகாரிக தர்மபாலா**



**சேர். பொன்னம்பலம்**


அவரே டொனமூர் அரசமைப்பு விதிகளின் சிறுபான்மை மக்களுக்கான பாதுகாப்பு உப விதி 29.2 மீறி, சுதந்திரம் பெற்ற மறு வருடமே 1948 குடியுரிமைச் சட்டத்தின் மூலம் 10 இலட்சம் மலையக இந்திய வம்சாவழித் தமிழர்களின் குடி உரிமையைப் பறித்து, நாட்டை விட்டு வெளியேற்றினார்.

2022ல் கூட எமது தலைவர்கள் இந்த ஜனநாயக விரோத மனித உரிமை மீறல் பற்றிப் பேச முடியாமல், 1987ல் ராஜீவ் காந்தி வாயிலாக 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், அரசியல் தீர்வு தேடும் அறிவிலிகளாக எமது அரசியல் தலைமைகளும், அமைப்புகளும் தங்களின் முட்டாள் தனத்தை உலகுக்குக் காட்டி வருகிறார்கள். வேடிக்கை என்னவென்றால், அதற்காகப் பலர் ஜெனிவா, நியூயோர்க், இலண்டன் எனப் பறந்து திரிந்து பல அரசுகளின் தரகர்களாகத் தங்களின் மேதாவித் தனத்தை உலகறியச் செய்யும் முட்டாள்களாக நடந்து கொள்கிறார்கள்.

இத்தகைய தமிழ்த் தேசியவாதிகளின் காட்டிக் கொடுப்புகளின் மத்தியில், தமிழ் இன அழிப்புச் சக்திகளின் எதிர்ப்பு சக்திகளின் கைக் கூலிகளாகச் செயற்பட்டு, எம் மக்களுக்கான நீதியையும், நிரந்தர அரசியல் தீர்வையும் கிடைக்க விடாமல் செய்யும் தமிழ் இனத் துரோகிகள் மலிந்து விட்ட இனமாக ஈழத் தமிழினம் மாற்றப்பட்டு விட்டது.

இதில் முதல் இடத்தில் இருப்பவர் தன் இனத்தை மறந்து, சிங்கள வெறியரைக் காப்பாற்றி, வெகுமதியாகச் சேர் பட்டத்தைப் பிரித்தானிய ஆட்சியாளரிடம் பிச்சையாகப் பெற்று பெருமை தேடிய சேர். பொன்னம்பலம்

Map of ANCIENT CEYLON




இராமநாதன் ஆவார். அந்த வரிசையில் எத்தனையோ பேர் டக்லஸ், கருணா, சம்பந்தன் என ஒரு நீண்ட பட்டியல்.

ஒட்டு மொத்தமதாக் பார்த்தால் கொட்டைப் பாக்கின் விலையும், வட்டுக்கோட்டைக்கு வழியும் சொல்வது போலவே, நிலைமைகள் நீடித்து வருவது தெரிகிறது. தமிழரின் யாழ்ப்பாண அரசும், பண்டார வன்னியனும் தோற்கடிக்கப் பட்டு, 1830 ஆங்கிலேய ஆட்சியாளரால், தமிழரின் ஆள்புல நிலங்களைச் சிங்களவரின் அரசுகளுடன் இணைத்த பொழுது, அநுராதபுரம் அடங்கலாக வடமத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணங்கள், கண்டிய அரசின் சிலபகுதிகள், தமிழரின் தாயாகமாக இருந்தது.

இன்று ஒரு காக்கை, குருவி கூட கூடுகட்ட ஒரு மரமும், நிலமும் உண்டு. ஆனால் தமிழரிடம் அரை காணி இடம் கூட இல்லாத நிலை.

தமிழரின் சம்மதமோ, அனுமதியோ பெறாமல் இந்தத் தீவை இராணுவ ஆக்கிரமிப்புகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் தனதாகப் பெற்றுக் கொண்ட பிரித்திதானிய அரசு, தமிழர் அரசுகளும், கண்டி இராச்சியமும் தமது ஆட்சிக் கட்டுமானத் தேவைகளுக்காக 1833ல் கோல்புறுக் கமரோன் இலங்கைத் தமிழ் தாயகத்தைச் சிங்கள தேசங்களுடன் இணைத்து, ஈழத் தமிழர்களைச் சிங்களவரின் அடிமை இனமாக்கினார். அன்று தொடங்கிய எமது சனி திசை, இன்றும் சிங்களத்தின் அடிமைகளாக்கி வைத்திருக்கிறது. இவற்றை வெளியே சொல்லவும் தெரியாமல், கொட்டைப் பாக்கு பேரம் போல் நாம் வட்டுக் கோட்டைக்கு வழி தேடுகிறோம் .

'என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம், என்று தணியும் எங்கள் அடிமை மோகம்'. கலாநிதி முருகர் குணசிங்கம் விடுதலைப் புலிகளின் தலைமையின் விருப்பத்தின் பேரில் எழுதி வெளியிடப் பட்ட 'இலங்கையில் தமிழர்' (ஒரு முழுமையான வரலாறு, கி.மு.300-கி.பி.2000) தென் ஆசியவியல் மையம், சிட்னி வெளியீடு. சிங்கள மொழியே நாட்டின் அரசகரும மொழி எனச் சிங்கள மொழிக்கும், சிங்கள இனத்துக்கும் நாட்டின் எல்லாப் பகுதிகள் மீதும், எல்லா இன மக்கள் மீதும் ஆரிய, சிங்கள, பௌத்த மதமே எனச் சட்டம் இயற்றி, வெறி அரசியலைத் தொடக்கி வைத்தார்.

அன்று பண்டா தொடக்கி வைத்த தமிழருக்கு எதிரான வன்முறைகளால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த 7 மாகாணங்களில் வாழ்ந்த தமிழ் மக்களும், அவர்களின் சொத்துகள், பல்லாயிரம் உயிர்களும் அழிக்கப்பட்டன. இந்தக் கலவரம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1915 சிங்கள பௌத்த இனவெறியரால் நடத்தப் பட்ட இந்திய, இலங்கை தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவரின் வியாபார நிலையங்கள், இஸ்லாமியரின் மசூதிகள் எரிக்கப்பட்டன.

இன்று மனித உரிமைகள் ஆணைச்

சபையில், சிங்கள பயங்கரவாத அரசுக்கு ஆதவாகப் பேசும் அலி சப்றியோ, தமிழரின் கல்வியை அழித்து, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு வித்திட்ட பதியுதீன் மொகமட்டோ, ராஜபக்சேக்களின் அடியாளாக விளங்கி வரும் ரிஷாத் பதியுதீனோ, புத்தி சுவாதீனம் இழந்தவர்களாக சிங்கள பௌத்த பயங்கரவாத ஆட்சிகளுக்கு ஆதரவாக உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் நியாயமான நீதியான அரசியல் தீர்வு பற்றிப் பேசாமல், வட்டுக் கோட்டைக்கு வழி சொல்லி வருகிறார்கள்.

இப்படியான பித்தலாட்ட அரசியலைத் தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், புலம்பெயர் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களும் 2009 தொடக்கம் செய்து வருகிறார்கள்.

இவர்களுக்கு எதைப் பறிகொடுத்தோம்? எவரிடம் பறிகொடுத்தோம்? எங்கே, எப்படி மீளப் பெறலாம்? என்கிற சிந்தனையே அற்ற முண்டங்களாக எம் இனம், கடந்த 100 வருடங்களாக பூம் பூம் மாடுகள் போல எல்லாருக்கும் தலையாட்டி விட்டு, நம்பிய தமிழ் இனத்துக்கு வாலைக் காட்டிவிட்டு தின்றுக் கொழுத்துத் திரிகின்றன. தெற்கில் அகதிகளான தமிழர்கள் கொழும்பில் இருந்து சரக்கு கப்பல் மூலம், திரிகோணமலை, காங்கேசன் துறை முகங்களுக்கு வெய்யில் காற்றில் கடல் வழியாக கொண்டு விடப் பட்டனர்.

அந்தக் கலவரத்தின் சசங்களத் தலைவர்களான டீ.எஸ்.சேனாநாயக்க பாரன் ஜயதிலகா உட்பட பலரையும் ஆங்கில அரசு கைது செய்து சிறைகளில் அடைத்தது. 1880 தொடக்கம் கலவரங்களைத் தூண்டும் பிரசுரங்களையும், பிரச்சாரங்களையும் தொடக்கி வைத்து, 1915 கலவரத்தை நடத்தியவர் அநகாரிக தர்மபாலா எனப் புத்த மதத் துறவுப் பெயரை வைத்துக் கொண்டவரான, புரட்டஸ்தாந்து மதத்தவரான டொன் கரோலிஸ் கேவாவிதாரன என்ற பெயர் கொண்ட சிங்களவர். இன்று பிரபலமான






மரத்தளபாட தயாரிப்பாளர்களான டொன் கரோலிஸ் நிறுவனம் அவரின் உறவினராவர்.

1915க்குப் பின்னர் பிரித்தானிய குடியேற்ற நாடான இலங்கைத் தீவு என்கிற தேசத்தில், இரண்டாவது தடவையாக பிற மொழி மத இன மக்களின் இரத்த ஆற்றில் குளிக்கும் ஜனநாயகத்தை பண்டார நாயக்க தலைமையிலான மகாஜன எக்சத் பெரமுனை என்கிற மக்கள் ஒற்றுமை முன்னணி அரசின் மூலம் நடத்திக் காட்டினார். இந்த முன்னணியில் அன்றைய பீட்டர் கெனுமன் தலைமையிலான கம்மியூனிஸ்ட் கட்சியும், கொல்வின் ஆர்.டி சில்வா தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சியும், இடது சாரிச் சிந்தனையாளரான பிலிப் ஐயவர்த்தனாவும் உறுப்புக் கட்சிகளாக ஆட்சியை நடத்தின.

இந்தக் கூட்டணியில் இருந்த கம்மியூனிஸ்ட் கட்சியிலும், இலங்கா சமசமாஜக் கட்சியிலும், காங்கேசன்துறையில் நாகலிங்கமும், பருத்தித் துறையில் வி.ஏ.கந்தையாவும், உடுவில் தொகுதியில் திரு.வ. பொன்னம்பலமும் போட்டி இட்டு, சிங்கள பொத்த இனவெறி அரசியலுக்கு தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் தமிழ் இனத் துரோக அரசியலை வடக்கில் தொடக்கி வைத்தனர்.

அவர்களின் நீட்சியாகவே அல்பிரட் துரையப்பா எம்.சி. சுப்பிரமணியம், செல்லையா குமாரசூரியர் போன்றவர்கள் தமிழினக் கூலித் துரோக அரசியல் கலாச்சாத்தைத் தொடக்கி வைத்தனர். இன்று டக்லஸ் பிள்ளையான் சுரேஸ் பிரேமச் சந்திரன் செல்வம், அடைக்கலநாதன், ஸ்ரீகாந்தா, சுமந்திரன் போன்ற எட்டப்பர் பரம்பரை பல்கிப் பெருகி, தமிழ் ஈழ மக்களையும், தமிழர் தாயகத்தையும் கூறு போட்டுச் சிங்களம் உள்ளிட்ட உலக அரசுகளின் தமிழ் இன அழிப்பை சுலபமாக்கும் தமிழர் அரசியல் தலைவர்களாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

இந்தத் திருப்பணியில் இப்பொழுது மிகத் தீவிரமாக இறங்கி இருப்பவர்கள் இந்த நால்வரும், அவர்களுடன் இந்தியப் பா.ஜ.க. தமிழ் மாநிலத் தலைவர் அண்ணாமலையும் அவர்களின் தொண்டர் அடிப்பொடி ஆதரவளர்களும். 1915 கலவரத்தில் ஈடுபட்ட சிங்களத் தலைவர்களை அன்றையப் பிரித்தானிய கவர்னர் சிறையில் அடைத்தும், கலகம் நடத்திய சிங்களக் காடையார்களைத் துப்பாக்கிச் சூடுகளை நடத்தியும் அடக்கினார்.

அவருடைய இனவெறி, மதவெறி அரசியலின் குருவாகவும் நாட்டை நாசமாக்கும் காட்டு மிராண்டி அரசியலை அறிமுகம் செய்தவர். இன்றும் இலங்கையின் எல்லா சிங்களக் கட்சிகளின் ஆதர்ச குருவாக விளங்கும் அநாகரிக தர்மபாலா என்கிற பெயரில், புத்த துறவியாக உருமாறிய தென்னிலங்கை பாணன்துறையில் இன்றும் பெரும் மரத்தளவாட நிறுவனமாக விளங்கும் டொன் கறோலிஸ் என்கிற புரட்டஸ்தாந்து மதக் குடும்பத்தில் பிறந்தார்.

சிறு வயதிலே இனவெறி படைத்த இவரை உசுப்பேத்தி, இந்து மதக் கடவுள்களையும், இந்திய வர்த்தகர்களையும் கொல்லும் அளவுக்குக் கொண்டு வந்தவர் அமெரிக்க சுதந்திரப் போரில் பங்காற்றி கேணல் பட்டம் பெற்று, இங்கிலாந்து திரும்பியதும் தியோசபிக்கல் அமைப்பு என்னும் மதவெறி அமைப்பைத் தொடங்கி, இலங்கையில் பல இடங்களிலும் புத்தமத கல்வி நிலையங்கள்,

பள்ளிக் கூடங்களை நிறுவி, தம்மை ஒரு புத்தமத காவலராகவே மாற்றினார் கேணல் ஒல்கொட். கொழும்பு கோட்டைப் புகையிரதநிலைய வீதிக்கு இவரின் பெயரே உள்ளது.

இந்தியாவின் மோடியின் அரசும் இவருக்கு தபால் தலை வெளியிட்டுக் கௌரவித்துள்ளது. ஆனால் தமிழரையும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளையும் பயங்கரவாதிகளாகத் தொடர்ந்து தடைப் படுத்தி வருகிறது. உலகமே அழிந்தாலும், தமிழரின் அடிமை மோகம் தொலையாது என்பதற்கு, எங்கள் நா(தாய்)க்குலம் சிங்கள இனவெறியன் சிங்கள வாக்காளரால் நிராகரிக்கப்பட்டு, அரசியல் குப்பை மேட்டின் இராசாவாக மாறிவிட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆரத்தி எடுத்து, பாத பூசை செய்யும் இந்தப் படமே சாட்சி.

இலங்கையிலும், இந்தியாவிலும் மதம் மற்றும் சமுதாய மறு மலர்ச்சிப் புரட்சிகளைச் செய்வதாக மக்களிடையே பிரிவினைகளை வளர்த்து, தமது கத்தோலிக்க மத மற்றும் மேலை நாட்டு வாழ்க்கை முறைகளைப் பரப்பியும், வெள்ளைக்கார கத்தோலிக்க வாழ்வியலைப் புத்த மதத்துடன் ஒப்பிட்டு தென் இந்தியாவில் பெசன்ட் நகரிலும், வட இந்தியாவில் புத்த காயாவிலும், புத்த மத அமைப்புகளை உருவாக்கி, இன்று அவரின் அமைப்பு உலக நரடுகள் பலவற்றில் செயற்பட்டு வருகிறது.

இவர் ஃபிறி மேசன் எனப்படும் இரகசிய குழுவில் இருந்துள்ளார். இந்தக் குழுவில் முன்னாள் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் 33ஆவது இடத்தில் இருந்தவர். அவர் ஈராக் போரிலும், ஈழப் போரிலும் பல முக்கிய முடிவுகளுக்குக் காரணமாக இருந்தவர் என்பது உலகறிந்த விடயமாகும்.

பிரித்தானியப் பிரதமராக இருந்த காலத்தில் கத்தோலிக்க தேவாலயங்களுக்குச் செல்லாமல் இருந்து, பிரதமர் பதவிக் காலம் முடிந்த பின்னர்தான் பகிரங்கமாகச் செல்லத் தொடங்கினார் என்பது பத்திரிகையில் வெளியான செய்தி. இதன் மூலம் இல்லு மினாட்டி அமைப்புகளின் தொடர்பு கொண்டிருந்தவர். இன்று மீண்டும் இலங்கை வந்த நோர்வே தரகர் எரிக் சோல்கைம், ரணிலை உலக காலனித்துவ பிரச்சாரகராக அறிமுகப்படுத்துகிறார்.

ஈழத் தமிழின அழிப்பின் முக்கிய சூத்திரதாரியான இந்த நாரதர் , தமிழரின் கடலடி வளத்தை அபகரிக்க வந்து, இந்தியாவால் லாடம் கட்டப்பட்டு, தன்னைக் காப்பாற்ற முள்ளிவாயக்கால் தமிழ் இன அழிப்புக்குத் துணை போனவர்.

அவருடைய கொலைவெறி இன்னமும் குறைவில்லை என்பதால், ரணிலுக்குப் பஜனை பாடுகிறார். எம்மைப் பிடித்த பிசாசுகள் எங்கேயும் போகாமல், தமிழனத்தை அழிப்பதே தமது பிறவிக் கடனாகச் செயற்படுவது தெரிகிறது. எனவே, நாம் முன்பைவிட எச்சரிக்கையாக வாழ வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.






# ஈழத் தமிழர்களின் தீர்வு எதுவாக இருக்க முடியும்?

ஈழத் தமிழர்களின் தீர்வு எதுவாக இருக்கமுடியும்? என்பதைப் பலர் மறந்துவிட்டார்கள். 2009 இந்த பின்னர் பல கட்சிகள், பல அமைப்புகள், பல குழுமங்கள் எனத் தோன்றினாலும், அவையெல்லாம் தமிழீழக் கோட்பாட்டை ஏதோ ஓர் விதத்தில் நீர்த்துப்போகச் செய்தவையே ஆகும். தமிழ் தேசிய இனத்தின் தாயகக்கோட்பாடு + வரைபடம் வேறு, தமிழீழக் கோட்பாடு + வரைபடம் வேறு

## தாயகக் கோட்பாடு

தாயகக் கோட்பாடுதான் ஒரு தேசிய இனத்தின் உயிர் மூச்சு. ஒரு இனம் அதன் நிலத்தில் வாழ்வதற்கான அடிப்படையே தாயகக்கோட்பாடு ஆகும். இலங்கை தீவு முழுவதும் பரவி வாழ்ந்த ஈழத் தமிழர்களின் இன்றைய தாயகம் “வடக்கு- கிழக்கு”. வடக்கு-கிழக்கு இணைப்புத்தான் ஈழத்தமிழர்களின் தாயகக்கோட்பாடு. இது ஒரு இனத்தின் அடிப்படை உரிமை. (ஒரு மனிதனின் அடிப்படை உரிமைகள் : உணவு, உடை, உறையுள் இருக்கின்றது). தாயகக் கோட்பாடு அற்ற இனம் உலகில் கொடிகட்டிப் பறந்த பல நூறு இனங்கள் மாயமாக மறைந்தது போல, ஏன் மாயன் இனம் + மாயன் நாகரிகம் இருந்த இடம் தெரியாமல் அழிந்த மாதிரி - இலங்கை தீவில் தமிழ் இனம் வாழ்ந்த அடையாளம், இருந்த இடம் இல்லாமல் அழிந்து விடும். ஓர் தேசிய இனத்தின் பல்லாயிரம் ஆண்டு கால வரலாறே அத்தேசிய இனத்தின் தாயகம் எது? என்பதை உறுதி செய்யும்.

## தமிழீழத் தனி நாட்டு கோட்பாடு

இன்றைய உலக ஒழுங்கு முறையில் ஓர் தேசிய இனம் அடையும் அதி உச்ச நிலைதான் தனிநாடு - “தமிழீழம்” ஆகும். தமிழீழத்தின் வரைபடம் + எல்லைகள் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் வெளியிடப் பட்டது. (அதில் ஒரு பக்கம் அம்பாறை, மறுபக்கம் சிலாபம் உள்ளது)

இன்று சிங்களரை ஒவ்வொரு நொடியும் தமிழீழத்தில் குடியேற்றித் தமிழீழத்தின் தாயகத் தன்மையை அழித்துக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு. தமிழீழ விடுதலைப் போரில் தங்களை முழுமையாக இணைத்துக் கொள்வது உலகத்தமிழர் + தமிழ்நாட்டார் முதல் கடமையாகும். எதிரிகளிடம் இருந்து தமிழீழத்தை முதலில் காப்பாற்றுங்கள். தமிழீழம் அழிந்தால், பிறகு திரும்ப மீட்கவே முடியாது என்பதை அனைவரும் இன்றாவது உணரவேண்டும்.

தமிழீழம் என்ற கோட்பாட்டை நீர்த்துப் போகச் செய்ய முனையும் தரப்புகள் முன்வைக்கும் சில கவர்ச்சிகரச் சொல்லாடல்கள் குறித்து மக்கள் விழிப்புடனிருத்தல் அவசியமாகிறது.

1. மாகாண சபை என்றால் என்ன?

2. 13 ஆவது திருத்த சட்டம் என்றால் என்ன?

3. அதிகாரப் பகிர்வு என்றால் என்ன?

4. தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழ மக்கள் உயிரை அர்ப்பணித்துப் போராடிய தமிழீழம் என்றால் என்ன?

வேறுபட்ட இந்த நான்கு தனித்தனி விடயங்களின் விரிவு பற்றி நாம் தெளிவாக அறிந்து வைத்திருத்தல் அவசியமாகிறது

## 13ஆவது திருத்த சட்டம்

அறுந்த பழஞ் செருப்பிலும் இழிவான - அழுகிய சாக்கடையிலும் கழிவான 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை தமிழீழ மக்களுக்குத் தீர்வுத் திட்டமாக ரஜீவ் காந்தி அளித்தார். இது இலங்கை சிங்கள ஒற்றையாட்சி அரசியல் அமைப்போடு இணைந்த ஒரு பகுதியே ஆகும்.

'தமிழீழம்' என்ற தமிழீழ மக்களின் தாயகப் பெயரைப் பயன்படுத்த தவறிய, ராஜீவ் -ஜெயவர்த்தனா உடன்படிக்கையில் மட்டும், 'வடக்கு - கிழக்கு' இணைப்பு ***(Merger of North and East)*** இருந்ததை சிங்கள சிறீலங்காவின் அறமன்றம் (நீதிமன்றம்) வடக்கு-கிழக்கு இணைப்புச் செல்லாது எனத் தீர்ப்பளித்து நீக்கிவிட்டது.

***13 ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தின் கீழ் அமையும் 'மாகாணசபை' பயனற்றதாகும். ஏன்?***

தமிழீழத்தில் வடக்கிலோ-கிழக்கிலோ அமையும் மாகாணசபையில் சிங்களவரான ஓர் ஆளுநரே முழு அதிகாரம் படைத்தவராக இருப்பார். தமிழர்களான முதல் அமைச்சரும், பிற அமைச்சர்களும் பொம்மைகளாகவே இருப்பார்கள். நில உரிமை அற்ற தமிழர் அதிகாரமும் + இலங்கை உச்ச





அறமன்றத்தின் தீர்ப்பும் தமிழீழத்தில் தொடர்ந்து சிங்களவர்களை அரசு குடியேற்றுவதற்கு இடமளித்திருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

இலங்கைத் தீவு முழுவதும் பரவி வாழ்ந்த ஈழத் தமிழர்களின் இன்றைய தாயகம் 'வடக்கு- கிழக்கு'. உண்மையில் தாயகக்கோட்பாடுதான் ஒரு தேசிய இனத்தின் உயிர் மூச்சு. ஆனால், ஈழத்தமிழர்கள் எங்கள் இருப்பு ஈழத்தீவில் இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது.

தாயக உரிமையும் - தன் முடிபுரிமையும் ***(Right to Self Determination)*** தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகள். இலங்கை ஒற்றையாட்சி அரசியல் அமைப்பில் இவ்விரு உரிமைகளும் தமிழர்களுக்கு அறவே இல்லை. வடக்கு- கிழக்கு இணைப்பு நிகழாவிட்டால், அடுத்த 50 வருடங்களில் இலங்கை தீவில் தமிழ் இனம் வாழ்ந்ததற்கான எந்தவித அடையாளமும் இருக்காது. (தமிழ் இசுலாமியர்கள் உட்பட)

இன்னும் ஐம்பது ஆண்டுகளில் நாம் நமது இரட்டைத் தாயகங்களில் ஒன்றான தமிழீழத்தைத் தொலைத்தவர்கள் ஆகி விடுவோம் என்பதில் ஐயமில்லை. காய்ந்த சருகுக்கு (இறந்த இலைக்கு) விதி : காற்றில் அலைந்து பறந்து திரிவது. சருகிற்கு ஒப்பாக தீர்வு விடயத்தில் ஈழத்தமிழர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவது தொடர்கின்றது. இன்று அதிகார மட்டத்தில் மாகாண சபையினுள்ளே மட்டும் தமிழர்களுக்கு முதல்வர், சமஷ்டி என சிங்கள தேசம் நாடகம் ஆடுகின்றது.

## மாகாண சபை : (Devolution of Power to Provinces)

இன்று இருப்பது ஒன்றுமே இல்லாத - ஒன்றுக்கும் உதவாத மாகாணசபை. இது தமிழர்களின் ஏக்கத்தையும், எதிர்பார்ப்பையும் ஈடு செய்யும் சட்டம் அல்ல. தமிழர்களின் தேசிய இனத் தன்மைக்கும், தமிழீழத்துக்கும் கேடு செய்யும் திட்டம். இலங்கையில் இருப்பது ஒன்பது மாகாணங்கள், இதில் இரண்டு (வடக்கு - கிழக்கு) தற்காலிகமாகத் தமிழர்களின் பகுதிகளாகக் காட்டப்படுகின்றது.

சிங்கள அரசு வடக்கிற்கு தமிழ் முதல்வர், கிழக்குக்கு இசுலாமியத் தமிழ் முதல்வர் என நிறுவி, மத அடிப்படையில் தமிழர் தாயகத்தை இரண்டாக உடைத்து, உலகிற்கு காட்டி வருகின்றது. ஈழத் தமிழர்களை மாகாணங்களின் உள் அடைப்பதால், காலப்போக்கில் வடக்கு- கிழக்கு இரண்டு மாகாணங்களும் சிங்கள மாகாணங்களாக மாறும் வாய்ப்பு 100% உள்ளது.

பத்து ஆண்டுகள் தமிழீழத்தில் தொடர்ந்து சிங்களர் குடியேற்றம் நடந்தால், தமிழர் தாயகம் பறிபோன மண் ஆகிவிடும். "மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு" என்பது, தமிழர் தாயகத்தை மூடி மறைக்கும் சிங்கள ஆட்சியாளரின் மாபெரும் சூழ்ச்சியே ஆகும். முழு அதிகாரம் பெற்ற 7 சிங்கள மாகாணங்கள் சிறத்தோங்கி நிற்க 2 தமிழ் மாகாணங்கள் (வடக்கு - கிழக்கு) சுடுகாடாய் அழியும்.

இந்தியா காசுமீரில் பிற மாநிலத்தவர்கள் நிலம் வாங்க முடியாது, குடியேற முடியாது என்னும் "மண்காப்புச்


Melliyalsarees
வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்
மெல்லியள்
சாரிஸ்
மலிவு
விற்பனை
Deepawali
Super Sale on
50%
Oct.21,22
+49 176 24650540
Rheinische Strasse 29
DORTMUND



சட்டம்" உண்டு. அச்சட்டத்தின் மூலம் அவர்கள் பிற தேசிய இனங்களின் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். இலங்கையில் தமிழர்களின் தாயகத்தைச் சிங்கள இனவெறியர்களின் குடியேற்றத்தில் இருந்து தடுக்க, இப்படி ஒரு சட்டம் இல்லை. தமிழ்நாட்டு தமிழர் இந்தியாவின் அதி உயர் பதவியான பிரதமாராக வர கூடிய வாய்ப்பு இந்திய சட்டத்தில் உள்ளது. இலங்கையின் அதி உயர் பதவியான சனாதிபதியாக தமிழர் வர முடியாது. சட்டத்தில் இடம் இல்லை. ஈழத் தமிழர் வெளிநாடு வரும் பொழுது அவர்கள் உரிமை கூடுகின்றது. ஈழத் தமிழ் சந்ததி வெளிநாடுகளில் சனாதிபதியாக வர முடியும். சட்டத்தில் இடம் உள்ளது. இந்தியாவில் மொழிவழித் தேசிய இனங்களுக்கு உள்ள வாய்ப்புகள், உரிமைகள் கூட இலங்கையில் தமிழீழ மக்களுக்கு இல்லை.

இலங்கையில் - தமிழரின் பண்டைத் தாயகத்தை ஒப்புக்கொள்ள, இலங்கை அரசியல் அமைப்பு இன்றும் மறுக்கிறது. தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளில் 2% கூட ஈழத்தமிழர்களுக்கு இன்று இல்லை என்பதைத்தான் இங்கு சுட்டிக்காட்டுதல் முறையானது. தமிழ்நாட்டிலாவது வெகுவிரைவில் தமிழர்களுக்கான அரசு அமைய வாய்ப்புள்ளது. ஆனால் ஈழத்தமிழர் தாயகத்தின் பெயர் கூட சொல்லமுடியாத தமிழ்த் தேசிய இனமாக, உலகில் நாம் தலை குனிந்து தாழ்வுற்று நிற்கிறோம்.

1957 இல் இலங்கையின் தலைமை அமைச்சர் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்காவுடன் (சிறீலங்கா விடுதலைக்கட்சி) தந்தை செல்வா செய்த பண்டா-செல்வா உடன்படிக்கை: தமிழர்களுக்கு ஓரளவு அடிப்படை உரிமை வழங்குவதாக இந்த உடன்படிக்கை அமைந்தது. தமிழர்களுக்கு மாவட்ட அவை வழங்குவதாக இந்த உடன்படிக்கை அமைந்தது. ஆனால் இலங்கைக்கு உள்ளே கையெழுத்தான இந்த இரு உடன்படிக்கைகளும், இருபெரும் சிங்களக் கட்சிகளின் அரசுகளால் கிழித்துக் குப்பைக் கூடையில் இடப்பட்டன. தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள். உடன்படிக்கைகள் எழுதப்படுவதும், எழுதப்படும் உடன்படிக்கைகள் கிழித்தெறியப் படுவதும் வழக்கமாயிற்று. ஒற்றையாட்சியின் கீழ் மட்டுமல்ல, சிங்களவரோடு கூட்டாட்சியின் கீழும் வாழ முடியாது என்ற ஒற்றை முடிவுக்கு வந்தார் தந்தை செல்வா. 1976 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா தலைமையில் "தமிழீழ தனி அரசு" எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் நிறைவேறிற்று.

***தலைவர் பிரபாகரன் தலைமையில் ஈழத்தமிழர்கள் உயிரை அர்ப்பணித்துப் போராடிய தமிழீழம் என்றால் என்ன? (ஈழத்தமிழர்கள் கோரிய சுயநிர்ணய உரிமை + அதிகாரப் பகிர்வு என்றால் என்ன?***

தமிழர் தாயகக்கோட்பாடு + தமிழ் தேசிய இனத்தின் அடையாளங்கள் + உரிமைகள் 100% உறுதி செய்த பிறகு, பிரான்ஸ் நாடு - யேர்மன் நாடு ஐரோப்பா ஒன்றியத்தில் இணைந்தது மாதிரி தமிழீழம்

- இலங்கை இணைவது. (பணம், வர்த்தகத்தில் மட்டும்) உலகத்தமிழ் இனத்தின் ஒரே போர்ப்படையாக (இராணுவம்) வீறு கொண்டு நிமிர்ந்த விடுதலைப் புலிகள் இருந்தது. ஓர் தேசிய இனம் தனக்கான ஒரு போர்ப்படையை வைத்திருப்பது வலிமை மிக்க மிகப்பெரிய அழகும் அவசியமுமாகும்.

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள், தமிழீழம் தவிர்ந்த எந்த தீர்வையும் ஏற்கவும் இல்லை, இறங்கி வரவும் இல்லை.1987 இற்குப் பின்னர் ஆயுதங்களைக் கீழே வைப்பது என்ற பேச்சுக்கே இடம் இருக்கவில்லை. ஓர் தேசிய இனம் தன் தனி போர்ப்படையைக் (இராணுவத்தை) கொண்டிருப்பது + பேணுவது அடிப்படையில் தனி நாடாகவே கருதப்படும். ஆனால், இன்று பல திடீர் விமர்சகர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ கோரிக்கையைக் கைவிட்டார்கள் என்று கூறுவது மிகமிகத் தவறான இன உடைப்பு வேலையாகும்.

வெறிபிடித்த சிங்கள இனம் பல்லாயிரம் ஆண்டுகளாய் வெறிபிடித்த சிங்கள இனமாகவே இருக்கிறது. “வடகிழக்கு மாகாணங்களை இணைப்பது - தமிழர்களுக்குத் தன் முடிபுரிமை வழங்குவது - வடக்கிலும், கிழக்கிலும் இருந்து சிங்களப் படைகளை விலக்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை” என்று வஞ்சனையை வாழ்வாய்க் கொண்ட சிங்கள தேசம் முழங்குகின்றது.

2009 க்கு முன் உறுதி கொண்டு விடுதலைப் புலிகள் போராடியதால் - இன ஒடுக்குமுறை உடைந்து, நொறுங்கி உருக்குலைந்தது. 2009 இல் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு ஒரு திருப்புமுனை ஆயிற்று. 2009 க்கு பின் உண்மையில் ஈழத் தமிழர்களது அரசியல் நகர்வு இன்றுவரை ஒரு அங்குலம் கூட முன்னகரவே இல்லை.

சிங்கள அரசிடம் ஊதியம் வாங்கி இயங்கும், மாதா மாதம் சம்பளம் வாங்கி இயங்கும் எந்த தனி நபர்களோ அல்லது கட்சியோ தமிழ் தேசியத்தில் உண்மையாக நிற்பார்கள், தமிழ் ஈழத்தை, தமிழர் அடிப்படை உரிமையை மீட்பார்கள் என ஈழத்தமிழர்கள் நம்பவில்லை. மாறாக “இன்றும் அறம் தழுவிய போரையே ஈழத்தமிழர்கள் நடத்துகிறார்கள். அடுத்தவர் இறையாண்மையைப் பறித்தெடுக்கும் போர் அல்ல - தமிழர் இறையாண்மையை மீட்டெடுக்கும் அறப்போர்”.





பூமிபுத்திரன்

# என்று ஒழியும் இந்தக் கொடுமை?

மனித குலம் நாகரிகத்தின் உச்சியில் வாழ்வதாகப் பெருமை பேசிக் கொண்டாலும், அதனைக் கேள்விக்கு உட்படுத்தும் விதமான சம்பவங்கள் உலகின் பல நாடுகளிலும் நடந்த வண்ணமேயே உள்ளன. இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உலக நாடுகள் அனைத்திலும் உண்டு. கலாசாரம், பண்பாடு, மரபுகள், விழுமியங்கள், மத நம்பிக்கைகள் எனப் பலப்பல காரணங்களின் அடிப்படையில் இத்தகைய விடயங்கள் தொடர்ந்த வண்ணமேயே உள்ளன. நவீன கால வாழ்வியலுக்கு ஏற்ப பலப்பல மாற்றங்கள் ஏற்பட்டாலும், சில விடயங்கள் சில நாடுகளில் மாறாமல் தொடர்ந்த வண்ணமேயே உள்ளன. ஏனைய நாடுகளின் முன்மாதிரியைக் கொண்டு அவற்றை மாற்றிக் கொள்ளுமாறு கோரிக்கைகள் வைக்கப்பட்டாலும், மனித உரிமை மீறல் என்ற அடிப்படையில் அவற்றைக் கைவிடுமாறு கோரப்பட்டாலும், ஒருசில ஆட்சியாளர்கள் அவற்றை மாற்றிக் கொள்ள முன்வராத நிலை தொடரவே செய்கின்றது.

அத்தகைய விடயங்களுள் ஒன்று மரண தண்டனை நடைமுறை. மிகக் கடுமையான குற்றங்கள் என ஆட்சியாளர்களாலும், நீதித் துறையாலும் கருதப்படும் வழக்குகளில் மரண தண்டனை வழங்கப்படுவதும், சில வேளைகளில் அவை மிகக் கொடூரமான வழிமுறைகள் ஊடாக நிறைவேற்றப்படுவதையும் ஆதிகாலம் முதலாகப் பார்க்க முடிகிறது. நவீனகால மரண தண்டனை முறையாகப் பொதுவில் தூக்குத் தண்டனை உள்ளது. அதேவேளை, தொன்று தொட்டுத் தொடரும் நடைமுறையாகவும் இது உள்ளது. கடந்தகால நடைமுறையான தலையை வாளால் வெட்டுதல் முறைமை இன்றும் தொடரும் ஒரேயொரு நாடாக சவூதி அரேபியா உள்ளது. ஏனைய ஒருசில நாடுகளில் துப்பாக்கியால் சுட்டுக் கொலை

செய்தல், விஷ ஊசி ஏற்றிக் கொலை செய்தல், மின்சாரக் கதிரை மற்றும் விஷ வாயு ஏற்றிக் கொலை செய்தல் போன்ற நடைமுறைகள் உள்ளன. நடைமுறை எதுவாக இருந்தாலும் நோக்கம் ஒன்றே. அது உயிரை எடுத்தல். இந்தப் பூமியில் வாழும் உரிமையோடு பிறந்த ஒருவருக்கு சட்டத்தின் பெயரால் அதனை மறுத்தல், அவ்வளவே!.

சாவொறுப்புத் தண்டனைக்கு எதிரான குரல்கள் காலங்காலமாக ஒலித்த வண்ணமேயே உள்ளன. மனிதாபிமானம் மிக்க மாந்தர்களின் அந்தத் தீனமான குரல்கள் போர்களின் வெற்றியிலும், கண்கள் கட்டப்பட்ட நிலையில் உள்ள நீதி தேவதை(?)யின் பார்வையிலும் மறைக்கப்பட்டு வந்த நிலைமையில் மாற்றம் தோன்றியது கடந்த நூற்றாண்டிலேயே!. மரண தண்டனைக்கு எதிரான குரல்கள் மேற்குலக ஜனநாயகத்தின் ஒரு வெளிப்பாடாக மாறிய நிலையில், உலகின் பல நாடுகளும் சட்டபூர்வமாக அதனை ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலைமை உருவாகியது.

இன்றைய நிலையில் உலகில் 108 நாடுகள் மரண தண்டனை முறையை முற்றாகவே கைவிட்டு உள்ளன. மேலும் எட்டு நாடுகள் போர்க் குற்றங்கள் அல்லாத குற்றங்களுக்கான மரண தண்டனையை இல்லாமல் செய்துள்ளன. 28 நாடுகளில் மரண தண்டனை முறைமை சட்டப்படியாக நடைமுறையில் இருந்தாலும், கடந்த 10 வருடங்களில் அவை ஒன்றுகூட நிறைவேற்றப் படவில்லை.

சாவெறுப்புத் தண்டனையை அண்மையில் இல்லாமல் செய்த நாடாக ஈக்குவரோறியல் கினி உள்ளது. ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள இந்த நாட்டில் கடந்த செப்டெம்பர் 20ஆம் திகதி, இது தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டது. குறித்த சட்டம் இன்னும் மூன்று மாதங்களில் நடைமுறைக்கு வரவுள்ளது.

இதேவேளை, உலகின் 55




நாடுகளில் இன்னமும் மரண தண்டனை முறைமை நடைமுறையில் உள்ளது. இதில் உலகம் முழுமைக்கும் மனித உரிமைகள் தொடர்பில் ஓயாமல் போதனை நடத்தும் அமெரிக்காவும் அடக்கம். இங்கே பெரும்பாலும் விஷ ஊசி மூலமே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு வருகின்றது. எனினும், ஒருசில மாநிலங்களில் மின்சாரக் கதிரை, விஷ வாயு, தூக்கிலிடல் மற்றும் துப்பாக்கிச் சூடு ஆகிய நடைமுறைகளும் பின்பற்றப்பட்டு வருகின்றன. கிடைத்துள்ள புள்ளி விபரங்களின் பிரகாரம் 2021ஆம் ஆண்டில் 579 மரண தண்டனைகள் உலகம் முழுவதும் சட்டபூர்வமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. உலகின் 18 நாடுகளில் நிறைவேற்றப்பட்ட இந்த மரண தண்டனைக்கு ஆளானவர்களில் 24 பேர் பெண்கள் ஆவர். இதில் ஈரானில் 14 பேரும், எகிப்தில் எண்மரும், சவூதி அரேபியா மற்றும் அமெரிக்காவில் தலா ஒருவரும் அடங்குவர்.

மொத்த மரண தண்டனைகளில் 80 விழுக்காடு அரபு நாடுகளான ஈரான், எகிப்து மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபைக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் ஈரானில் ஆகக் கூடுதலாக 314 பேரும், எகிப்தில் 83 பேரும், சவூதி அரேபியாவில் 65 பேரும் மரண தண்டனைக்கு ஆளாகி உள்ளனர். ஈரானில் மரண தண்டனைக்கு ஆளானோரில் 132 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னைய ஆண்டில் உலகம் முழுவதும் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளின் எண்ணிக்கை 483ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த வருடத்தில் சீனாவில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் மரண தண்டனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை ஐயம் வெளியிட்டுள்ளது. சீனச் சட்டங்களின் பிரகாரம் மரண தண்டனைக்கு ஆளாக்கப்படுவோரின் விபரங்கள் ரகசியமாகப் பேணப்படுவதால், அது பற்றிய துல்லியமான விபரங்களைப் பெற முடியாமல் உள்ளதாகக் கூறுகிறது மன்னிப்புச் சபை.

அதேசமயம், உலகில் கடந்த வருடத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை முன்னைய வருடத்தை விடவும் 40 விழுக்காடு உயர்ந்துள்ளது. 2021இல் உலக நாடுகள் முழுவதிலும் 2,052 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 2020இல் இந்த எண்ணிக்கை 1,477 ஆக விளங்கியது. உலகம் முழுவதிலும் மரண தண்டனையை எதிர்நோக்கி உள்ளவர்களின் எண்ணிக்கை 28,670 ஆக உள்ளது. இவ்வாறு மரண தண்டனையை எதிர்நோக்கி உள்ளவரிகளில் 82 வீதத்தினர் வெறும் 9 நாடுகளில் உள்ளனர். இதில் முதலாவது இடத்தில் உள்ள நாடாக ஈராக் உள்ளது. இங்கே 8,000க்கும் அதிகமானோர் மரண தண்டனைக்காகக் காத்திருக்கின்றனர்.

இரண்டாவதாக பாகிஸ்தானில் 3,800 பேரும், மூன்றாவதாக நைஜீரியாவில் 3,036 பேரும் உள்ளனர். இந்த வரிசையில் அடுத்தடுத்த இடங்களில் அமெரிக்கா 2,382, பங்களாதேஸ் 1,800, மலேசியா 1,359, வியட்நாம் 1,200, அல்ஜீரியா 1,000 என்பவை உள்ளன. ஒன்பதாவது இடத்தில் உள்ள இலங்கையில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் மரண தண்டனைக்காகக் காத்திருக்கின்றனர்.

ஐ.நா. சபையில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ள உலகின் 193 நாடுகளில் 144 நாடுகள் ஏதோ ஒரு வகையில் மரண தண்டனை முறைமையை ஒழித்துக் கொண்டுள்ளன, அல்லது நடைமுறைப்படுத்தாமல் உள்ளன. ஏனைய 55 நாடுகளில் அமுலில் உள்ள இந்த நடைமுறையை முற்றாகவே ஒழித்துக் கட்டுவது மானுட சமூகத்தின் கடமைகளுள் ஒன்று. அதற்கான உலகளாவிய முயற்சியில் கரங்கோர்ப்பது சக மனிதனை நேசிக்கும் ஒவ்வொருவரினதும் கடமையாகின்றது. நான் தயார். நீங்கள் தயாரா?

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி

# Jasmine Silk House

2023ஆம் ஆண்டின்
புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்





**Fester Str.50, 40882 Ratingen**
**Tel : 021 028 447 44**
**Mob. : 0173 1937 325**

எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்



இயக்குநர் மணிரத்தின் இயக்கத்தில் பொன்னியின் செல்வன் என்ற பெயரோடு இராச இராச சோழனது கதை படமாக்கப் பட்டிருக்கிறது. ஆனால், அது வரலாறு அல்ல!. அத்திரைப்படத்தைக் காணமுன் இராச இராச சோழனின் வரலாறு சிறிதளவேனும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். பாகுபலி ஒரு கற்பனை கதை. ஆனால், அந்த கற்பனையே மிஞ்சி விட செய்த ஒருவன் உண்மையாகவே இருந்தான். ஆயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த அந்த மன்னன் ரத்தமும், சதையுமாக வாழ்ந்து வந்தான். அவன்தான் மாவீரன் இராசேந்திர சோழன்!

தமிழர்கள் இன்னும் அந்நியனின் போர்திறனை வியந்து, நம் ஒப்பற்ற அரசர்களின் திறனை மறந்தும், மறைத்தும் வாழ்ந்து கொண்டிருப்பது ஆச்சரியமே! கிரேக்க மன்னன் அலெக்சாண்டர், பிரான்சின் நெப்போலியன், கலிங்க மன்னர் அசோகர், முகலாய மன்னர் அக்பர் இவர்களை விட போர்த் திறன், அரசியல், சாணக்கியம், கலை, இலக்கியம் என அனைத்திலும் சிறந்து விளங்கி, வரலாற்றில் மறைந்த, வட இந்திய அரசால் வரலாற்றில் மறைக்கப்படும் ஒரு ஒப்பற்ற தேசங்களை ஆண்ட மன்னன், இங்கு இருக்கும் ஒவ்வொருவனும் மார் தட்டிக் சொல்லிகொள்ள வேண்டிய ஒரு தமிழன், இந்த 'இராசேந்திர சோழன்'. இவனின் காலடிக்குக் கூடத்தகுதி அற்ற அந்நியர்களை வீரர்கள் எனப் புகழ்ந்து கொண்டு இருக்கிறோம்

# சோழப்படை வேந்தன்



இவ்வருடத்திலிருந்து சரியாக 1,000 வருடத்திற்கு முன்பு உலகின் கால் பகுதிகளை தன் காலடியில் வைத்திருந்த, மாமன்னன் இராசேந்திர சோழன், சோழப் பேரரசின் தனி பெரும் மன்னனாக முடி சூட்டப்பட்டான். இவனது போர்ப் படையில் 12 தொடக்கம் 14 லட்சம் வீரர்கள், இலட்சத்திற்கும் மேற்பட்ட குதிரைகள், 50,000 க்கும் மேற்பட்ட யானைகள் இருந்துள்ளன. இப்படை வீரர்களின் எண்ணிக்கை தற்போதுள்ள இந்திய இராணுவத்தின் எண்ணிக்கைக்கும், அமெரிக்க இராணுவத்தின் எண்ணிக்கைக்கு இணையானது. கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் படையில் இருந்ததும் 1 லட்சத்துக்கும் குறைவானவர்களே!.


தரை வழியாக தற்போதுள்ள கேரளம், ஆந்திரா, ஒரிசா, பீகார், மேற்குவங்கம், தெற்கு கர்நாடகம், வங்க தேசம் ஆகிய பெயர்களைக் கொண்ட பகுதிகளையும், கடல் வழியாக, இன்றைய இந்தோனேசியா, மலேசியா, ஆகிய நாடுகளைக் காலடியில் வைத்திருந்தான். இவனது கடாரப் படையெடுப்பின் கப்பல் படையைக் கற்பனை செய்து பாருங்கள், எத்தனை எத்தனை ஆயிரம் மைல்கள், எத்தனை கப்பல்கள், எவ்வளவு மனித முயற்சி தேவைப்பட்டிருக்கும்? மனித இயந்திரங்கள், பாய் மரக் கப்பல்களைக் கொண்டு இத்தனை நாடுகளை வென்ற உலகின் முதற் பெரும்மன்னனாவான்.

இராசேந்திரன் தனிப் பெரும் மன்னனாக முடி சூட்டிக்கொள்ளும் பொழுது அவனுக்கு வயது 50ஆக இருக்கும் என கருதப்படுகிறது. கப்பற்படைக்குத் தலைமையேந்தி கடாரம் (இந்தோனேசியா) செல்லும் பொழுது இவனின் வயது 61. அறுபது வயதிலும் இளைஞனுக்கு உரிய மனநிலையில் இருந்துள்ளார். கங்கைப் படையெடுப்பின் போது, கங்கை ஆற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் மறு முனைக்கு எப்படிச் செல்வது? என்று புரியாமல் இருந்த போது, இவனது படையின் நூற்றுக்கணக்கான யானைகளை வரிசைப்படுத்தி, இலட்ச கணக்கான வீரர்களை மறுமுனைக்குக் கொண்டு சென்றனர்.

கங்கைப் படையெடுப்பில் வென்ற பிறகு, தோற்ற மன்னர்களின் தலையில் கங்கை நீர் குடங்களை வைத்து, சோழ நாடு வரை அவர்கள் நடத்திக் கொண்டு வரப்பட்டனர். இப்படையெடுப்பின் போது, வங்கத்தை ஆண்ட புகழ் மிக்க மன்னன் 'மகிபாலனை' பெரும் போரிட்டு வென்ற


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்





**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்துபயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு




**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது




**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**

பெருமைக்குரியது இவனின் படை. கங்கையிற் கொண்ட புனித நீரினைக் கொண்டு தலை நகரான சோழபுரத்தை உருவாக்கியதால் அது ‘கங்கை கொண்ட சோழபுரம்’ என்று அழைக்கப்பட்டது. பின்னாளில் அதுவே, அதிக ஆண்டுகள் (சுமார் 240 ஆண்டுகள்) ஆண்ட சோழர்களின் தலை நகரானது.

கங்கைப் படையெடுப்பின் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பாண்டிய மன்னன் ஓர் பெரும் படையினைத் திரட்டி கொண்டு, சோழ தேசம் நோக்கி வருகிறான். இதனை அறிந்த இராசாதிராசன், அவர்களுடன் போர் புரிய ஒரு படையுடன் செல்கிறான். சோழன் வருவதை கேள்விப் பட்ட பாண்டியன், தனது மீன் கொடியைச் சுருட்டிக் கொண்டு ஓடினான். இதுவே இந்நாளில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ‘மீன்சுருட்டி’ என்று அழைக்கப்படுகிறது. இது ஓர் செவிவழிச் செய்தியாகும்.

முகமது கஜினி அதிஉத்வேகத்துடன் வட இந்தியா நோக்கிப் படையெடுத்த கால கட்டம் அது. அப்போரில் வட இந்திய மன்னர்கள் ஒரு சேர நின்று, கஜினியைத் தோற்கடித்தனர். இப்போரில் இராசேந்திர சோழன் பெரும் படையை வட இந்திய மன்னர்களுக்கு நட்புடன் அனுப்பி வைத்தான். தோற்ற பிறகு முகமது கஜினி சென்ற இடம் வரலாற்றுப் புகழ் பெற்ற சோமநாதபுரம்.

பெரும் மனித உழைப்பைக் கொண்டு, நீர்ப் பாசனத்திற்காக இந்த நாட்டிலே மிகப்பெரிய ஏரியை, 25 கி.மீ நீளமும், 6.5 கி.மீ அகலமும் கொண்டதாக உருவாக்கினான். இது கங்கை கொண்டு புனிதமாக்கப்பட்டதால் இது ‘சோழகங்கம்’ எனப்பட்டது. இது இப்பொது மண்ணால் மூடப்பட்டுள்ளது, ‘பொன்னேரி’ எனப்படுகிறது.

இராசேந்திர சோழன் கட்டிய கோவில்களின் எண்ணிக்கை 32. இதில் கங்கை கொண்ட சோழபுரம், ஈழம், ஆந்திரா, கர்நாடக ஆகிய இடங்களில் கட்டிய கோவில்களும் அடங்கும். வாயுக் கடவுளுக்காக ஆந்திராவில் கட்டப்பட்டுள்ள புகழ் வாய்ந்த ‘காளஹஸ்தி’ திருக்கோயில் இவன் ஆட்சியில் தான் வளர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு, முழுவடிவம் பெற்றது.

கல்கியின் புனைவுக் கதையான பொன்னியின் செல்வனை வாசித்தவர்கள் எல்லாம் வந்தியத்தேவனைப் பற்றி அறிந்திருப்பீர்கள். ஆம்! அவன்தான் இவனுடைய ஆட்சியிலும் முதன்மைத் தளபதியாக விளங்கியவன். தனது அத்தையின் கணவன் ‘வல்லவராயன் வந்தியத்தேவன்’.

தனது மகன் இராசாதிராசனுக்கு இளம் வயதிலே முடி சூட்டப்பட்டு தந்தையும், மகனும் 26 ஆண்டுகள் சேர்த்து ஆட்சி புரிந்தனர். இவனது ஆட்சியில் பின்னாளில் இராசாதிராசனே பல போர்களுக்குத் தலைமை புரிந்தான். வட இந்தியா, இலங்கை, பாரசீகம், அரேபியம், சீனா, ரோம், கிழக்கிந்திய தீவுகள் ஆகிய நாடுகளுடன் வணிகத் தொடர்பு வைத்திருந்தான்.

கடாரப் படையெடுப்பினைப் பற்றி நிலவும் பல கருத்துகளில் ஒன்றாக, அங்கு வாழ்ந்து வணிகத்தில் ஈடுபட்டுவந்த தமிழர்களுக்கு, விசயப் பேரரசால் வந்த





Original Srilankisches & Indisches Restaurant

# Sweet Chilli




100% Halal
100% Frisch
100% Naturgewürze
100% Naturkräuter



புதிய முகவரியில்
150 ஆசனங்களுக்கும் மேல்




**Rheinische Str. 78**
**44137 Dortmund**
**Tel : 0231 315 46 84**
www.sweetchilli-do.de



இன்னல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், தனது செல்வாக்கினை, தனது படை வலிமையை அங்கு காட்டும் பொருட்டு, தனது படையெடுப்பினை நிகழ்த்தி வெற்றி கொண்டான்.

இவன் வெற்றிக்குப் பரிசளிக்கும் விதமாக, கம்போடிய மன்னன் சூரிய வர்மன் இராசேந்திர சோழனின் தாய் பெயரில் கம்போடியாவில் கோவிலை ஏற்படுத்தினான். இராசேந்திரன் தன்னைச் சுற்றி அனைத்துப் போர்த் திறன்களும் அறிந்த, கடும் பயிற்சிக்குட்படுத்தப்பட்ட போர்க் குழுவினரைத் தன்னுடைய நலனுக்கும், நாட்டின் நலனுக்குமாக வைத்திருந்தான்.

மேலைச்சாளுக்கியர்களிடம் நிலவி வந்த கொடும் பகையினாலும், கீழைச் சாளுக்கியர் அவர்கள் வசம் செல்லாமல் இருப்பதற்கும், சாணக்கியத் தனமாக கீழைச் சாளுக்கியரைத் தன் வசப்படுத்த தனது மகள் அங்கம்மாளை, தனது தமக்கை மகன் கீழை சாளுக்கிய இளவரசன் இராசராச அரியனிற்குத் திருமணம் செய்து வைத்து, பின்னாளில் அவனையே மன்னனாக்கி, மேலைச் சாளுக்கியருக்கு எதிராக மூன்று முறை பெரும்களம் கண்டு பெரும் வெற்றி கண்டான்.

அந்தமான் தீவில் மலை உச்சியில் இராசேந்திரன் பற்றிய கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனை ஆராய்ந்தால் மேலும் தகவல்கள் கிடைக்கும். இராசேந்திர சோழனின் கப்பற்படைத் திறனைப் பாராட்டி மதிப்பளிக்கும் பொருட்டு இந்திய கப்பற்படைப் பயிற்சிக் கப்பலுக்கு இந்திய அரசு **TS Rajendra** என்று பெயர் சூட்டியுள்ளது. இவனது ஆட்சியில் 'தீண்டாமை' இல்லை, பறையர்களுக்கும் நிலங்கள் சரியாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது.

23, கி.பி. 910, முதலாம் பராந்தகச் சோழனின் பெரும் படையும், பாண்டிய மன்னன் இராச சிம்மனின் பெரும் படையும் 'வெள்ளூர்' எனும் இடத்தில் பெரும் போர் புரிந்தனர். போர் என்றால் அப்படி ஒரு போர். போரின் முடிவில் சோழன் பெரும் வெற்றி கொள்கின்றான். பாண்டிய நாட்டை முடி சூட்டிக்கொள்ள வந்த சோழனுக்கு பெரும் அதிர்ச்சி. பாண்டிய மன்னன் தனது இராச சிம்ம இந்திரஆரத்தையும், மணி முடியையும் போரில் உதவிய சிங்கள மன்னனிடம் கொடுத்துவிட்டு, சேர நாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டான்.

கடுங் கோபமடைந்த பாராந்தகச் சோழன், ஓர் பெரும் படையினை இலங்கைக்கு அனுப்பி, இலங்கையை வென்றான். ஆனால் இந்திர ஆரத்தையும், மணி முடியையும் கண்டறிய முடியவில்லை. ஆண்டுகள் கழிந்தன. மன்னர்கள் பலர் வந்து சென்றனர். ஏன் இராசராச சோழனால் கூட அதைக் கைப்பற்ற முடியவில்லை. சரியாக 107 வருடம் கழித்து இராசேந்திரச் சோழன் மிகப்பெரும் படையுடன் இலங்கைக்குச் சென்று, முழு இலங்கையையும் துவம்சம் செய்து, இலங்கை மன்னன் 5ம் மகிந்தனை வென்று, இந்திர ஆரத்தையும், மணி முடியையும் கைப்பற்றி, சோழ நாடு வந்த வேந்தன் இந்த சோழன்.

இராசேந்திரச் சோழனும், சைவ நெறியையே பின்பற்றினான். தன்னுடைய ஆட்சியில் பிற சமயங்களுக்கும் அதே முக்கியத்துவம் கொடுத்து வந்தான். எந்த நேரத்திலும் தான் சார்ந்த சமயத்தையோ, மொழியையோ யார் மீதும் திணிக்கவில்லை. இந்த அடிப்படை விடயங்களாவது தெரிந்துகொண்டால்தான், திரைப்படமாக வெளிவரப்போவது, இராசராசசோழனின் சிறுதுளிக் கதையே என்பது பலருக்கும் புரியும்.

அவதானி



# உளவு நிறுவனங்கள்

ஐரோப்பிய ஒன்றியத்தை சிதிலமடையச் செய்ய உளவு நிறுவனங்கள், ஐரோப்பிய நாடுகளை கருமேகங்கள் போல சூழத் தொடங்கியுள்ளன. முன்பு ஐரோப்பிய நாடுகள் தனித்தனியாக இருந்தன. அதனால் அவற்றில் பொருளாதார, சமூக, இராணுவக் கட்டமைப்பு தனித்தனியாக இருந்து வந்தன. எனினும், ஒரு புரிந்துணர்வுக்கு உட்பட்டு ஐரோப்பிய நாடுகள் என்ற பிராந்திய ஒற்றுமையை அக்கறையுடன் காப்பாற்றி வந்தன. அத்துடன் ஒவ்வொரு ஐரோப்பிய நாடும் தமது பொருளாதார விருத்திகளை தமது நாட்டின் வளங்களிலிருந்தும் மற்றைய நாடுகளுக்கு தமது பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலமும் தமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தன.

ஆசிய நாடுகளுக்குள் உளவு நிறுவனங்கள் நுழைவதற்குக் காரணமாக இருப்பதற்கு பல காரணங்கள் இருந்த போதும், ஆசியக் கண்டம் சார் நாடுகளையும் அந்நாடுகளை கொண்ட கடல் பரப்பினையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் தமது சொல்லுக்குக் கட்டுப்படும் நாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதுமாகவே வல்லமை கொண்ட நாடுகள் தமது நடவடிக்கையை மேற்கொள்ளும்.

ஆசியப் பிராந்திய நாடுகளுக்குள் உளவு நிறுவனங்கள் நுழைவதற்கு அந்நாடுகள் சமூக, பொருளாதார, இராணுவக் கட்டமைப்புகளில் வலிமையற்றனவாக இருப்பதே காரணமாகும். இத்தகு நாடுகள் வறுமை கொண்ட நாடுகளாகவும், வளர்முக நாடுகளாகவும் இருப்பதும், சறுக்கு மரத்தில் ஏறுவதற்குச் ஒப்பானதாக அவர்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் அத்தகு நாடுகளின் இருக்கும். ஆனால், ஐரோப்பிய நாடுகளுக்குள் தமது உளவு நிறுவனங்களை நுழைய விடுவது என்பது இலகுவான காரியமல்ல.

ஏனெனில் ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும் தமது பொருளாதாரக் கட்டமைப்பு, நிதிக் கட்டமைப்பு, சமூகக் கட்டமைப்பு, இராணுவ கட்டமைப்பு, காவல்துறைக் கட்டமைப்பு, அரச திணைக் களங்களின் கட்டமைப்பு என அத்தனை கட்டமைப்புகளையும் பலம் பொருந்தியனவாயும், எந்த இடத்திலும் எந்த இரகசியமுமே கசிந்து போகா வண்ணம் மக்களின் தேசிய உணர்வோடு ஐக்கியப்பட்ட கட்டமைப்பாகவே இருக்கும். மக்களே அதற்கு காவலரண்.

இத்தனை பலமான அத்திவாரங்களைக் கொண்ட கட்டமைப்பாக இருந்த போதும், உளவு நிறுவன ஒற்றர்களால் இரகசியங்களைச் சேகரிக்கக் கூடிய சுதேச மக்களில் அங்கொன்றும், இங்கொன்றுமான

இரகசியங்களை ஒற்றர்களுக்குக் கொடுப்பது நடைபெற்றாலும், கழுகின் பார்வையைக் கொண்ட மேற்சொன்ன கட்டமைப்பின் புலனாய்வுப் பிரிவினர் அதனை முளையிலேயே கண்டறிந்து, சம்பந்தப்பட்ட ஒற்றர்களைக் கண்டறிந்து, தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் அவர்களுக்கு சிறைத் தண்டனை வழங்குவதுடன், அவர்களுடைய சொத்துகளையும் நீதித்துறை பறித்து, அதனை அரச சொத்துரிமையாக்கி விடுகின்றது.

உளவு நிறுவனங்களில் உளவாளிகளாகவும், ஒற்றர்களாகவும் பணிபுரிவோர் அதற்கும், அதுசார்ந்த பட்டப் படிப்பைப் படிக்க வேண்டியவர்களாக இருப்பார்கள். உலக மக்கள் அனைவருமோ அல்லது உலக நாடுகளோ ஒரே மாதிரியானவை அல்ல. ஒவ்வொரு இன மக்களும் வெவ்வேறு குணாம்சங்கள் கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்கள் அவரவர் மொழியாலும், பண்பாட்டாலும் பின்பற்றப்படும் மதங்களாலும் வடிவமைக்கப் பட்டவர்களாகவே இருப்பார்கள். அதற்கூடாகவே ஒற்றர்கள் தமது வேலையைச் செய்வார்கள்.

மொழி ரீதியாக ஒன்றிணைக்கப் பட்ட மக்களுக்கு மொழிதான் முக்கியம். அதன் மூலமே நீங்கள் அறியப்படுகிறீர்கள். உங்கள் மொழியே உலகில் சிறந்த மொழி என்று மொழிசார் பற்றுள்ள மக்களிடமிருந்து இரகசியங்களை அறிந்து கொள்வதற்காக, இவ்விதமாகச் சொல்லி, அவர்களை மகிழ்ச்சியடையச் செய்து, அவர்களிடமிருந்து இரகசியங்களை அறிந்து கொள்வார்கள்.

அது போல தம்மதத்தின் மீது அதீத பற்றுக் கொண்ட மக்களை மத ரீதியாகவும், பண்பாட்டு மீது அதிக அக்கறை கொண்ட மக்களைப் பண்பாட்டு ரீதியாகவும் உளவு நிறுவனங்கள் அணுகும். இரகசியங்களை அறிந்து கொள்ள வேண்டியவை ஒரு நாட்டின் கட்டமைப்புகள் சார்ந்தவை மட்டுமல்ல, சாதாரண மனிதர்களும் தான் என்பதற்கமைய மனிதர்களையும் உளவு நிறுவனங்கள் ஒற்றர்கள் மூலமாக அவர்களுடன் இயல்பாகப் பழகி அறிந்து கொள்வார்கள்.

அதே போன்றுதான் அந்தந்த அரசப் புலனாய்வுப் பிரிவினரும் தமது குடிமக்களை நோட்டம் விட்டுக் கொண்டே இருப்பார்கள். பொது இடங்களில் நடமாடும் மக்கள் மட்டுமல்ல, அரச திணைக் களங்களில் பணி செய்வோர், வணிக நிறுவனங்களை நடத்துவோர், திரைப்பட மாளிகை உட்பட களியாட்ட விடுதிகள் என அங்கு கூடும் அனைவரையும் அரசப் புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள். அதற்குக் காரணம் தம்மால் கண்காணிக்கப் படும் மக்கள் உளவு நிறுவனங்களின் ஒற்றர்களோடு தொடர்புடையவர்களாக இருக்கின்றார்களா என்பதையறிவதற்கே!.

தமது நாட்டின் பாதுகாப்புக்காக ஒற்றர்களைக் கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள். மக்கள் கூடும் இடங்களில் ஒரு ஓரத்தில் ஒரு நாயுடன் சிறிய தட்டொன்றை முன்னால் வைத்து, அதில் காசு போடுங்கள் என உணர்த்திக் கொண்டே இருக்கும் ஒருவரைக் கடந்து போகையில், அவர் நாயுடன் இருக்கும் சாதாரண மனிதனாகவே தோன்றுவார்.

ஆனால், மக்களை அணுகும் ஒற்றர்களைக் கண்காணிப்பதற்காகப் புலனாய்வுப் பிரிவினரால் அனுப்பட்ட இரகசிய காவல்துறையாளராகக்கூட இருக்க வாய்ப்புண்டு. கையில் மதுப் போத்தல்களுடன் ஒருவருக்கொருவர் சண்டையிடுவது போல நடித்துக் கொண்டும், அங்குமிங்குமாக நடந்து கொண்டும், சில வேளைகளில் பஸ்தரிப்பு நிலையங்களில் அழுக்கான உடையுடன் நித்திரை கொள்வது போல பாசாங்கு காட்டிக் கொண்டிருப்பவர்கள்கூட ஒற்றர்களைக் கண்காணிப்பாளராகக்கூட இருக்கலாம்.

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார, நிதி, இராணுவம், காவல்துறை சார்ந்த திணைக் களங்களில் வேலை செய்வோரைப் பணியாளர் போர்வையில் வேலை செய்யும் புலனாய்வாளர் தனது சக பணியாளர் மற்ற நாடுகளின் உளவு நிறுவனத்தோடு உறவு வைத்திருக்கிறாரா? அவர் அவர்களின் ஒற்றரா? என்பதைக் கதையோடு கதை என்பார்களே அது போல கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள்.

குறிப்பாக பணி இடைவேளையின் போது பணியாளர்கள் சாப்பிட்டுக் கொண்டே உரையாடும் போது, அவர்களின் உரையாடுதல் எதை நோக்கியது? என்பதை










# சோழன் பொருட்களின் விநியோகஸ்தகர்

**DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் உணவுப்பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்**







## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

கண்காணித்துக் கொண்டே, தானும் அதில் ஆர்வத்துடன் ஈடுபடுவது போல நடித்து, அவரிடமிருந்து நூலிழையாக வரும் மற்றைய நாட்டினுடைய அனுதாப ரீதியான கருத்துகளையோ, அன்றி புகழ்பாடும் கருத்துகளையோ கவனிக்காதது போல கேட்கும் இவர்கள், தாமும் அத்தகைய கருத்துடையவர்களே என அவர்கள் நம்பும்படியாக உரையாடலில் ஈடுபட்டு, அவர்களின் மனக்கிடக்கைகளை மெல்ல மெல்ல அறிந்து கொள்வார்கள்.

பணியாளர்கள் என்ற போர்வையில் ஒற்றர்களாக செயல்படும் இவர்களாற்றும் பணிகளில் எத்தகைய போக்கு இவர்களிடம் இருக்கின்றது என்பதையும் கண்காணித்துக் கொண்டேயிருப்பார்கள். ஐரோப்பிய நாடுகளின் கட்டுமானங்கள் சிதைவுறாமல் இருப்பதற்கு, மக்களின் அமைதியான வாழ்வும், அவர்களுக்குத் தேவையானவற்றை அரச அமைச்சுகள் சார்ந்த திணைக்களங்கள் ஊடாகப் பெற்று மகிழ்ச்சியாக வாழ்வதிலேயே தங்கியிருக்கின்றது. மக்களுக்குத் தேவையானவற்றை உரிய நேரத்தில் கொடுப்பதற்கான பொறுப்பின் தலைமைத்துவமாக இருப்பது அந்தந்த பொறுப்புக்குரிய திணைக்களங்களும் அதன் அதிகாரிகளுமே!.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருளெனில், அந்தப் பொருள் குறித்த திகதியில் இறக்குமதி செய்யப்பட்டு, அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பொருள் தரக் கட்டுப்பாட்டாளர்களால் தரம் பார்த்து, அதற்கு முன்னால் உள்ள இறக்குமதியைக் கண்காணிக்கும் திணைக்களங்களின் கவனிப்புக்கு உட்பட்டு, அதற்கு முன்னால் உள்ள அமைச்சின் திணைக் களத்தின் உத்தரவுப்படியே இவ்வளவும் நடக்கும். கடையில் வாங்கும் ஒரு பொருள் பல திணைக்களங்களின் கண்காணிப்புக்கு உட்படுகிறது.

ஒரு திணைக்கள அதிகாரிகளிடத்தோ, பணியாளர்களிடத்தோ காணப்படும் அசிரத்தை, அலட்சியம் தாமதப்படுத்தல் போன்றவற்றுக்குக் காரணம் அவர் ஒற்றராகவும் பணிபுரிகிறாரா? என்பதை, திணைக்கள உள்ளகப் புலனாய்வாளர்கள் கவனிக்கத் தொடங்குவர். ஆசிய நாடுகளில் காணப்படும் வறுமை, இனமுரண்பாடுகளை யொட்டி அங்கு உளவு நிறுவனங்கள் உளவு பார்ப்பதற்கும் ஐரோப்பிய நாடுகளில் உளவு பார்ப்பதற்கும் வித்தியாசம் உண்டு.

**(தொடரும்)**





S.K. Silks &
Gold Paradise
SK
SINCE 2003
வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்
வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
21ஆம் ஆண்டில்....
30%
50% OFF
தள்ளுபடி
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648
மாபெரும்
ராஜ
முத்திரை

# உளம்
## திறக்கும் உண்மைகள்

### மனம்
நம் ஒவ்வொருடைய
மனத்திருப்தி தான்
நம்மை உயர்த்துவதும்
தாழ்த்துவதுமாக இருக்கிறது.

### வாழ்க்கை
எல்லாம் என்னுடையது என்ற
வாழ்க்கை பயணத்தில்
இறுதியில் எதுவும்
நம்முடையது இல்லை
என்பதே நிதர்சனம்!.

### மாற்றம்
மனிதனின் தேவையில்
மற்றவர்களின் சேவையும்
அடங்கி இருக்கிறது..
அதை அறிந்து வாழும் போது
வாழ்க்கை அழகாக மாற
மாற்றம் பிறக்கிறது...





### போராட்டம்
தானாக உயரும் வயது..
விடாமல் துரத்தும் காலம்..
தடுக்க முடியாத நேரம்..
கடக்கத் துடிக்கும் இளமை..
காலைத் தடுக்கும் சமூகம்..
தொடவேண்டிய இலக்கு..
இத்தனை போராட்டங்கள்தான்
வாழ்க்கை...!

### காதல்
என் இதயப்புத்தகத்தில்
உன் நினைவுகளை மட்டுமே
பதிக்க விரும்புகிறேன்
அதை நான் மட்டுமே
படிக்கவும் நினைக்கிறேன்
நீ கூட அறியாமல்..

“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அகர கவிக்களம்....

## என் தேசமே!

பல தேசம் தாண்டி
நாம் வாழ்கின்ற போதும்
எம் மனம் என்றுமே - உன்
நலம் வேண்டியே மன்றாடும்
இறைவனிடம் - என் தேசமே
கலங்காதே உனக்காக
என்றும் விளிப்புடன் நாம்

● **நிரோயா-வினோதன்,**
**அம்ஸ்ரடாம், நெதர்லாந்**

## ஏக்கம்

தாகம் தீர்க்க காகம்
பானையில் கல்லைத் தூக்கிபோட்டுக்
காத்திருப்பது போல
ஒவ்வொரு மனிதனும்
அன்பு என்ற மூன்று எழுத்திற்காக
ஏங்கிகாத்திருக்கிறான்.

## ஏழையின் ஏக்கம்

எதிர் வீட்டு
ஜன்னல்களைப் பார்த்தேன்
அழகழகான சட்டைகள் போட்டிருந்தன
ஆனால், என் சட்டையிலோ
அழுக்கான பல ஜன்னல்கள்
நிறைந்திருக்கிறது!!!

● **நந்தினி, இலண்டன்**

திடம்..
இதுவரை தீர்க்கப்பட்ட
அனைத்தும் தீர்க்கப்பட
காரணம் யாரோ ஒருவர்
அவற்றை
எதிர் கொள்ளத் துணிந்ததே

அவை ஒவ்வொன்றும்
உண்மைகளை
எதிர்கொள்ளக் கூடிய
துணிச்சலில் தான் துவங்கியது

வாழ்க்கையை நேருக்கு நேர்
தயங்காது சந்திப்பித்தல்
உனக்கும் சரி எனக்கும் சரி
உதவாது

எவ்வளவு
விரைவில் முடியுமோ
அவ்வளவு விரைவில்
நிதர்சனங்களை
சந்திக்கத் தயாராகு..



ஓரறிவு மரம்
ஓராயிரம் உயிருக்கு
நிழல்க்குடை

ஆறறிவு மனிதம்
அடித்துக் கொள்கிறது
அரையடி நிலத்துக்கு..

● **பாமினி, பெர்லின்**

# தேசிய சபை எதனைச் சாதிக்கும்

இலட்சுமணன்



‘அதளபாதாளத்துக்குக் வீழ்ந்து விட்ட நாட்டைக் கட்டியெழுப்பி விடப் போகிறேன்’ என்று பதவியை ஏற்றது முதல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்கான எந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. அதனால்தான் தேசிய சபையை அமைத்து, நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம் என்று முயல்கிறார் போலும். ஒன்றை அமைத்து விடுவதும், இயங்கச் செய்வதும் இலங்கையில் சாதாரணமானதொன்றல்ல. ஆரம்பத்திலேயே பலர் அதனை எதிர்த்து விட்டார்கள். அங்கத்துவம் பெற மறுத்தும் விட்டார்கள். அங்கத்துவம் பெற்றும் முதல் கூட்டத்தில் பங்குபற்றாது தவிர்த்துமிருக்கிறார்கள். அதே நேரத்தில் பாராளுமன்றத்தைத் திசை திருப்பும் செயற்பாடாகவும் தேசிய சபை பார்க்கப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழர்களின் பார்வை வேறு, சிங்களவர்களின் பார்வை வேறு, வெளிநாட்டவர்களின் பார்வை வேறு. வெளிநாட்டவர்கள் என்றால் அதில் மேற்கு நாடுகள், கிழக்கு நாடுகளின் பார்வை வேறு என்று பார்வைகளையே வேறு வேறாக அடுக்கிக் கொண்டு போகலாம். இந்த நிலையில், தேசிய சபையால் எதனைச் சாதித்துவிட முடியும்? என்பதே முதல் கோணல்தான்.

நாட்டின் வரலாற்றில் பல ஆணைக்குழுக்கள், சபைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. சில இயங்குகின்றன, சிலவற்றைக் காணவில்லை. தேசியசபை இலங்கையின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகாலத் தேசியக் கொள்கைகளை வகுக்கவிருக்கிறது. இவை நாட்டின் எதிர்கால சந்ததியையும், எதிர்காலத்தையும் இலக்காகக் கொண்டிருக்கவேண்டும்.

நாட்டில் ஏற்பட்ட அரகலய போராட்டத்தினாலேயே ஜனாதிபதி மாற்றத்துக்கான சூழல் ஏற்பட்டது. அந்த ஜனாதிபதி மாற்றத்தையடுத்து சர்வகட்சி அரசாங்கம், தேசிய அரசாங்கம் என்று இப்போது தேசிய சபை அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சபை எதனைச் செய்ய வேண்டும்? எவற்றினைச் செய்யக் கூடாது என்பது முதலில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். அது இதுவரை நடைபெறவில்லையென்றே சொல்லலாம். மக்களின் நிலைப்பாடுகளைப் பாராளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், அது நடைபெறுவதில்லை. அங்கு அமைக்கப் பட்டிருக்கும் தேசிய சபை



நிறைவேற்றுமா? என்பதனைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.



தேசிய இணக்கப்பாடு தொடர்பில் பலரும் கருத்துகளை வெளியிட்டாலும், வெறும் கருத்து வெளிப்பாடாகவே அவை இருந்து விடுகின்றன. சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சியில் யாரும் ஒத்துழைக்காமையினால், பிரதானமான ஆளும் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவை பெரும்பான்மையாகக் கொண்ட அமைச்சரவை உருவாக்கப் பட்டது. அதனையடுத்து தேசிய அரசாங்கம் தொடர்பில் பேசப்பட்டது, முயலப்பட்டது. ஆனால் அதுவும் யாராலும் ஏற்கப்பட வில்லை.

அதன் பின்னர் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவ்வாறு நகரும் பொழுதுதான் தேசிய சபை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் தமிழ்த் தேசியத் தரப்பு பங்குபற்ற மாட்டோம் என்று அறிவித்தது. அதே போன்று தேசியக் கட்சிகள் சிலவும் தேசிய சபையில் இணைய மறுத்துள்ளனர்.

தேசிய அரசாங்கம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்ட வேளையில் சர்வகட்சி இணக்கப்பாட்டின் தேவை பற்றிப் பேசப் பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை. அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படும் போது, மக்களிடையே பாரிய விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் அதனைப் பற்றி அரசாங்கம் கணக்கிலெடுக்க வில்லை. அந்தவகையில்தான் தேசியச் சபையை அமைப்பதானது, சர்வதேச ரீதியில் காணப்படும் எதிர்ப்பு மற்றும் நம்பிக்கையின்மையை இல்லாது செய்வதற்கான முயற்சியே தவிர, வேறு ஒன்றுமில்லை என்று அரசியல்வாதிகள் விமர்சிக்கின்றனர். அத்தோடு இது பாராளுமன்றத்தைத் திசை திருப்பும் முயற்சியும் கூட என்பதும் விமர்சனமாக இருக்கிறது.

தேசியச் சபை நேர்மையானதாக, கொள்கை ரீதியிலான விடயங்களுக்கு அமைய செயற்படும்வகையில் இருக்க வேண்டும். திறந்த வெளிப்படைத் தன்மையுடன் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். நாட்டின் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகள் பல பாராளுமன்றத்தில் எதிரொலிக்கின்றன. இருந்தாலும் இச்சபை இவற்றையெல்லாம் கணக்கிலெடுக்குமா என்ற கேள்வி பொதுப்படையாகவே இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கிறது.




ஆனால், பாராளுமன்றத்துக்கு இதுவரை உத்தியோகப் பூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை. தேசியச் சபை அமைக்கும் நிலையிலேயே நிதி தொடர்பான இணக்கப்பாட்டைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்காமல் இருப்பது முறையல்ல என்பதுகூட மற்றுமொரு குற்றச்சாட்டாக இருக்கிறது. இவ்வாறான பல்வேறு குழப்பங்களுடன்தான் தேசியச் சபை செயற்பட வேண்டியிருக்கிறது.

இவற்றோடு இணைந்ததாகத்தான் பொருளாதாரச் சீரமைப்பு, அரசியல் ஸ்த்திரப்படுத்தல், மக்களது வாழ்வாதார மேம்பாடு என மிக நீண்ட பல விடயப் பரப்புகளுக்குத் தேசியச் சபை தீர்மானகரமான முடிவுகளை எடுத்தாக வேண்டும். மிக முக்கியமாக இலங்கையில் புரையோடிப் போயிருக்கின்ற இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான பரிந்துரைகள், செயற்பாடுகள் இருக்கின்றன. தமிழர் தரப்பினரின் மீதான நீண்ட கால அடக்குமுறைகள் நெருக்கடிகள் தொடர்பில் எடுக்கப்படுகின்ற தீர்மானகரமான முடிவுகள் முக்கியமானவை. ஆனால் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பது மாத்திரமே முதன்மைபெற்றால், தேசியச் சபை பலனற்றதாகவே இருக்கும்.

ஜனாதிபதி ரணிலில் முதல் முயற்சியல்ல என்றாலும், தேசியச் சபை வெற்றியளிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் எண்ணிக் கொள்வதற்கான ஏதுக்கள் ஏதுமில்லையானால், இதுவும் பிசுபிசுத்தே போகும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. வடக்கு - கிழக்கில் மீண்டும், மீண்டும் தொல்பொருள் திணைக்கம் என்ற போர்வையில் தமிழரின் பூர்வீக நிலங்கள், புராதனச் சின்னங்கள் இருக்கும் இடங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடு தொடர்ந்த வண்ணமிருக்கிறது. நாட்டின் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக ஆளும் கட்சி ஆயத்தமானால், அதனை மற்றைய கட்சி எதிர்ப்பது வரலாறு. அது சிலவேளைகளில் வெறும் பூச்சாண்டி நாடகமாகக் கூட இருக்கலாம் என்றும் தமிழ் மக்களிடம் சந்தேகமிருக்கிறது. இவற்றையெல்லாம் அனுசரித்தே இதய சுத்தியுடன் தேசியச் சபையானது கொள்கைகளை வகுக்க வேண்டும்.

அத்தோடு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகாலக் கொள்கை வகுப்பு என்பதற்கு அப்பால், நாட்டிற்கு அவசரமாக மேற்கொள்ள வேண்டியவைகள் என்ற வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு அமையப் போகிறது? என்பதே முக்கியமாகும். தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படுமானால் அதில் இணைந்து, இனப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தர அரசியற் தீர்வைக் கண்டுவிடலாம் என்றே தமிழர் தரப்பு எண்ணியிருக்கலாம். ஆனால் அது நடைபெறவில்லை. தேசியச் சபை என்பது இதனைச் சாத்தியப்படுத்த வாய்ப்பில்லை என்பது தமிழ்த் தேசியத் தரப்பின் எண்ணமாக இருக்கிறது.

இந்த இடத்தில்தான் சிங்களத் தரப்பான பெரும்பான்மையினர், இலங்கை நாடு பொருளாதார ரீதியாக நலிவுற்று மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதற்கு முதற் காரணம், இலங்கையின் இனப்பிரச்சினை என்பதை உணர்ந்து கொள்ளத் தலைப்பட வேண்டும். அல்லாமல் இலங்கையில் சாத்தியமற்ற விடயங்களுக்குள்ளேயே நாம் எல்லோரும் அல்லல்படவேண்டியிருக்கும் என்பதே உண்மை!.

அந்தவகையில், தேசியச் சபையின் செற்பாடுகளில் முதன்மையானவைகளாக இலங்கை அரசியலமைப்புக்கு மேலதிகமாக உள்ள தமிழர்களை இலக்காகக் கொண்டு 1979இல் கொண்டு வரப்பட்டு இப்போது சிங்கள, முஸ்லிம் என அனைத்துத் தரப்பினரையும் சர்வ சாதாரணமாக அடக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல். தமிழர்கள் எதிர்பார்க்கின்ற நியாயமான, தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற புதிய அரசியலமைப்பு உருவாக்கம். வடக்கு-கிழக்கை சிங்கள மயமாக்கும் செயற் திட்டங்கள் உடனடியாக



நிறுத்தப் படுதல், வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தைப் பிளவுப்படுத்தும் அல்லது சிறுகச் செய்யும் நடவடிக்கைகள் தடுக்கப்படுதல் இருத்தல் வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை நடைபெறவில்லை. காலம் கடத்தப்படுகிறது. தனிமனித சுதந்திரங்களைப் பறிக்கும் பாதுகாப்புத் தரப்பினருடைய செயற்பாடுகள் இப்போதும் காணப்படுகின்றன. குறிப்பாக பொது, சிவில் செயற்பாட்டாளர்கள், முன்னாள் போராளிகள் பின்தொடரப் படுகின்றனர். இடையூகளுக்குள்ளாக்கப் படுகின்றனர், அச்சுறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்களை முழுச் சுதந்திரமான மனோநிலையில் நடமாடுவதற்கே முடியாத சூழலிலேயே வைத்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் யுத்த காலத்திலும் அதன் பின்னரும் காணாமலாக்கப் பட்டவர்கள் தொடர்பிலான அவர்களுடைய உறவினர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படவேண்டும். வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவம் குறைக்கப்பட வேண்டும். அரச, தனியார் கட்டடங்கள் காணிகளிலிருந்து விலகுதல் வேண்டும் போன்ற கோரிக்கைகளும் காணப்படுகின்றன.

தமிழர்களுக்கெதிராக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும், இன அழிப்புத் தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் சபை விசாரணை மேற்கொள்ள வேண்டும், தண்டிக்கப்பட வேண்டும் என தமிழர் தரப்பு கோரி வருகின்ற நிலையில், இப்போது இலங்கையில் பொருளாதாரக் குற்றங்களும் நடைபெற்றிருப்பதாகப் பிரேரணை கொண்டு வரப்படுகிறது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவைகள் செருகப் படுகின்றன. இவ்வாறான நிலைமையில் தமிழர்கள் தங்களது உரிமையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? என்பதே கேள்வி.

நல்லிணக்கம் குறித்துப் பேசப்படுகின்ற வேளையிலும் பேரினவாத, பௌத்த மனோநிலையுடன் இருக்கின்ற, செயற்படுகின்றவர்களிடம் எவ்வாறு அதனை எதிர்பார்க்க முடியும்? என்ற கேள்வியிருக்கையில் இந்தத் தேசியச் சபை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்க முற்படுமா? அல்லது இதுவும் முன்னையவைகள் போன்றதாகவே இருந்து காணாமல் போகுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.



ஜெரா

# மேதகு
## ஏன் வலுவிழந்தது?




புலிகளின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்கும் முயற்சியில், மேதகு பாகம் ஒன்று கடந்த ஆண்டு வெளியாகியிருந்தது. சினிமாவுக்கான இணையதளங்களில் வெளியாகிய வேகத்தில், உலகத் தமிழரிடையே அமோக வரவேற்பையும் பெற்றிருந்தது. தமிழ் ரசனைச் சூழலுக்கு இயைந்த வகையில் உருவாக்கப்பட்ட திரைக்கதை, இந்த ஈர்ப்புக்குக் காரணமாகவுமிருந்தது. தற்போது அதன் தொடர்ச்சியாக வெளிவந்திருக்கும் மேதகு பாகம் இரண்டு பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

புலிகள் பயங்கரவாதிகளா? விடுதலைப் போராளிகளா? பஞ்சம் தீர்க்க போன இடத்தில் நாடு கேட்டுப் போராடலாமா? என்கிற கேள்விகளுக்குப் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களின் ஊடாகப் பதில் தேடும் முயற்சியாக பாகம் இரண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த முயற்சியானது செம்மைப் படுத்தப்படாத திரைக்கதையமைப்பினால் தோல்வியில் முடிந்திருக்கிறது. கதாபாத்திரத் தேர்வு, உரையாடல் மொழி, தாக்கமற்ற காட்சியமைப்பு, சொல்லப்பட்ட வரலாற்றுச் சம்பவங்களில் தெளிவின்மை, தொடர்ச்சியின்மை எனப் பல்வேறு குறைபாடுகள் படம் முழுவதும் காணப்படுவதாக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மாதிரியான ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்கும் போது பல்வேறு சிக்கல் எழும். உலகின் அனேகமான நாடுகளில் தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகளின் தலைவரைப் பற்றி திரைப்படம் எடுத்துத் திரையரங்குகளில் வெளியிட முடியாது. எனவே, இணைய வெளியில் பார்க்க வசதியற்ற சினிமா பார்வையாளர்களிடம் கொண்டு போக முடியாது. இது மேதகு படத்திற்கு இருந்த முதற்சவால் ஆகும். ஆனால், கொரோனாவுக்குப் பின்னர் துரித வளர்ச்சி கண்ட சினிமாவுக்கான இணையதளங்கள் இந்தச் சவாலைத் மொத்தமாகவே தின்று தீர்த்து விட்டது. 'நல்ல கதையொன்றால் கொண்டுவா, பணம் தருகிறேன்' என்கின்றன

சினிமாவுக்கான இணையதளங்கள். அந்த விதத்தில்தான் உலகம் முழுவதும் மேதகு சென்று சேர்ந்தது.

இந்த வாய்ப்பை மேதகு சரியாகப் பயன்படுத்தியதா? ஆம்! மேதகு பகுதி ஒன்று அந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டது. முதல்படம் என்பதாலும், அதீத எதிர்பார்ப்பு இருந்தமையினாலும், பிரபாகரன் அவர்களின் வாழ்க்கையின் ஆரம்ப கட்டங்கள் என்பதனாலும், கடும் சிரத்தையுடன் படத்தை உருவாக்கியிருந்தார்கள். பார்வையாளர்களும் அதற்கு அமோக வரவேற்பளித்தனர்.

அதே உற்சாகத்துடன்தான் பாகம் இரண்டையும் பார்வையாளர்கள் நெருங்கினார்கள். காரணம், அதற்கூடாகத்தான், ஈழத்தமிழர் விடுதலை வரலாற்றையே மாற்றிப்போட்ட பல சம்பவங்கள் சொல்லப்பட வேண்டியிருந்தன. ஏனெனில் 1970 ஆண்டுகளுக்குப் பின்னரான ஈழத்தமிழர் வரலாற்றையும், விடுதலைப் புலிகளையும் நூலளவிற்குக் கூடப் பிரித்துப் பார்க்கவியலாது. தீரமிகு விடுதலைப் புலிகளின் வரலாற்றின் வழியே, அதன் போராளிகளின் வாழ்க்கை வழியே தம் கடந்த காலத்தைத் திரையில் கொண்டுவரப் போகிறார்கள் என்றே ஈழத்தமிழர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் மேற்சொன்ன குறைபாடுகளின் காரணமாக அத்தனை எதிர்பார்ப்புக்களும் பொய்த்தன.

படத்தின் தொடக்கத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கான காரணங்களை 1948 ஆம் ஆண்டிலிருந்து தேடவேண்டும். 1948 தொடக்கம் 1967 வரையான காலப்பகுதியில் ஈழத்தமிழருக்கு எதிராக சிறீலங்கா அரசு மேற்கொண்ட வன்முறைகளே ஆயுதப் போராட்ட உருவாக்கத்திற்குப் பிரதான காரணம். அந்தக் காலப்பகுதியின் வரலாற்றை ஒரு சில திரை ஏடுகளில் கடந்து போக முடியாது. பல்லாயிரம் வரலாற்றுத் திரைப்படங்களாக வரவேண்டிய துன்பச் சம்பவங்கள் பல அந்தக் காலப்பகுதியில்தான் நிகழ்ந்தேறின. எனவே, அந்தக் காலப் பகுதி தொடர்பில் சரியான தெளிவற்ற - தேடலற்ற இயக்குநர் ஒருவரினால் விடுதலைப் புலிகளின் வரலாற்றைத் தெளிவாகக் கொண்டுவர முடியாது.

தமிழகத் திரைக் கவர்ச்சியும், ரசனையும் உலகத் தமிழர்கள் அனைவரையுமே கட்டி வைத்திருக்கிறது. தமிழக சினிமா சூழலின் வியாபார மேலாதிக்கம், சென்னையைத் தாண்டி வேறொரு இடத்திலிருந்து, நல்ல சினிமா வருவதற்கான வாய்ப்பை வழங்குவதில்லை. விடுதலைப் புலிகள்




இதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். அவர்களின் தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவு, நிதர்சனம் போன்ற அமைப்புகள் இந்த முயற்சியில் குறிப்பிடத்தக்க வெற்றியையும் அடைந்திருந்தன. ஈழத்து எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினி, கமல், விஜய், அஜித் எனக் கட்டமைக்கப்பட்டிருந்த சினிமா ரசனையை, இன விடுதலையுணர்வுக்குள் இழுத்து வரும் அளவிற்குத் திரைப்படங்களை உருவாக்கின.

அதற்குப் பிறகு ஈழத் தமிழர்கள் சினிமா என்றால், அது தமிழகத்திலிருந்தே வர வேண்டும் என்கிற கற்பிதத்திற்குள் சென்று விட்டனர். தமிழகம் சினிமா துறையில் கண்டிருக்கும் அபரீதமான வளர்ச்சியும், பிரம்மாண்டமும் இதற்குப் பிரதான காரணம். அந்தத் தொழில் நுட்பங்களின் மொத்த வளர்ச்சியையும் கொண்டு எடுக்கப்பட்ட மேதகு 2 தான் தோற்றிருக்கிறது.

அப்படியாயின் அதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? கதைச் சூழலைத் தமிழக சினிமா உலகம் சரியாக விளங்கிக் கொள்ள முடியாமைதான். தமிழக சினிமா உலகம் கட்டமைத்து வைத்திருக்கும் வியாபாரத் தந்திரமிக்க கதாநாயகத்தனம் என்பது, சினிமா கவர்ச்சிக்கானது மட்டுமானதே ஆகும். எனவே என்னதான் கேட்க மெய்சிலிர்க்கும் நிஜமாந்தர்களின் கதையை அதனிடம் கொடுத்தாலும், அது தான் கற்று வைத்திருக்கிற விதத்தில் மாற்றியே திரைப்படமாக வெளிவிடும். ஏனெனில் தமிழக சினிமா என்பது ஒரு தொழிற்சாலை. ஒரு மசாலாக் கூடம். உலகையே அசைக்கும் கதைகளை அதனிடம் கொடுத்தாலும், அது தனக்குரிய மெருகுடனேயே எடுத்துக்கொள்ளும்.

உண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவரது வாழ்வின் ஒவ்வொரு மணிநேர வாழ்க்கையும், ஒரு வரலாற்றுப் படங்களை உருவாக்குவதற்கான சம்பவங்களைக் கொண்டது. ஏனெனில் சாத்தியமேயற்றது என கைவிடப்பட்ட ஒரு விடயத்தை, ஒருவர் தன் சிரமேற்கொண்டு நடந்தாரெனில், அவர்கடந்த நேரங்களின் வலி பெரிது. அந்த நேரத்தின் ஒரு நிமிடத்தைத் தானும் தவறவிட்டு, அந்நாளில் அவர் வாழ்ந்த வாழ்வின் தொடர்ச்சியைத் திரையில் காட்டுவது சாத்தியமற்றது. மேதகு பாகம் இரண்டு இதனைச் செய்ய முயன்றே தோற்றிருக்கிறது.

பிரபாகரன் அவர்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற ஏதாவது ஒரு சம்பவத்தை எடுத்துக் கொண்டு, அதனை மட்டும் வரலாற்றுத் திரைப்படமாக்கியிருந்தால் அதில் வெற்றியடைந்திருக்க முடியும். தமிழினப் படுகொலை என சொல்லப்படும் 'கறுப்பு யூலை' ஈழத்தமிழர் வரலாற்றில் நினைவு வைக்கப்படும் மிகக்கோரமான சம்பவம். பல்லாயிரம் தமிழர்களின் வாழ்க்கையை அழித்துப் போட்டச் சரித்திரம். அந்த நாட்களின் துயரத்தை எந்தச் சினிமாவினாலும் ஒரு காட்சியில் கடந்து போகவியலாது. மேதகு 2 அதனைச் செய்தது. தோற்றுப்போனது.

இப்படியாக சரியான தேடலும், புரிதலுமற்று எடுக்கப்படும் திரைப்படங்கள் தான் இனிவரும் காலங்களில் வரலாறாகப் போகின்றன. எதிர்காலத் தலைமுறை அதிலிருந்தான் பாடம் கற்றுக்கொள்ளும். அப்படி பாடங்கற்கும் ஒரு குழந்தை மேதகு 2 திரைப்படத்தைக் காண நேர்ந்தால், பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என்கிற முடிவுக்கே வரும். ஏனெனில் இத்திரைப்படத்தில் பிரபாகரன் அவர்களால் செய்யப்பட்டதாகக் காட்டப்படும் முக்கொலைகளும், ஆயுதங்கள் எதுவுமற்ற நிராயுதபாணிகளைச் சுட்டுப்படுகொலை செய்வதாகவே காட்சியமைக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் ஏன் சுட்டுக் கொல்லப் பட்டார்கள்? என்பதற்கு எவ்வித வலுவான காரணங்களும் வரலாற்றின் அடிப்படையில் முன்வைக்கப்படவில்லை.

தமிழக சினிமா இயக்குநர் ராம் அவர்கள் ஒரு விடயத்தைக் குறிப்பிடுவார். "ஈழத் தமிழர்களின் வாழ்வியலை, ஈழத்தமிழர்கள் எடுத்தால்தான் அது சரியான முழுமைபெறும். வேறு எந்தத் தேசத்தைச் சேர்ந்தவராலும் அதனைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது" என்பார். அதுதான் உண்மையும்கூட. கற்பனைகளுக்கு அப்பாலான இரத்தம், சதையுமான ஈழத்தமிழரின் வாழ்வியலை, இனவுணர்வை மாத்திரம் வைத்து கற்றுக்கொள்ள முடியாது. நூல்களை மாத்திரம் வாசித்துக் கற்றுக்கொள்ள முடியாது. அதுவொரு வாழ்தல் முறை. வாழ்வியக்க முறை. அதற்குள் இயங்கினால் மாத்திரமே அதனைக் கற்றுக் கொள்ளவியலும். அப்படி கற்றுக்கொண்டு அதனைத் திரைப்படமாக்கும் போதே அது திரையில் வெற்றிபெறும்.

24 மணிநேர தகவல் உதவிச் சேவையுடன்

V BOX



300 க்கும் மேற்பட்ட Channels மற்றும் 5,000க்கும் மேற்பட்ட திரைப்படங்கள்

இப்போது அனைத்து நாடுகளிலும்




வாராந்தம் புத்தம்புது திரைப்படங்கள்,
உங்கள் அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஆகிய அனைத்தையும் கண்டுகளிக்கலாம்

**REACH OUR DISTRIBUTORS**

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

பாகம் : 29

ஆய்வாளர் சேது, அமெரிக்கா



## குறியீட்டு சார்புகள்

*(Symbolic Predispositions):*

உணர்வுகளைத் தூண்டி செயல்படுத்தும் குறியீடுகள் அனைத்தும் குறியீட்டு சார்புகளாகும். கொடி, சின்னம், சித்தாந்தம் (இந்துத்வா, தமிழ்த் தேசியம்) ஆகியவையும் குறியீட்டு சார்புகளே. உதாரணமாக ஒரு நாட்டின் தேசியக் கொடி என்பது ஒரு குறியீடு. அவர்களின் பிடித்த நாட்டின் கொடி, நல்ல உணர்வுகளைத் தூண்டும். எதிரி நாட்டின் கொடி வெறுப்பைத் தூண்டும். இதனால்தான் கொடி எரிப்புகள் அடிக்கடி நடைபெறுகிறது. குறியீட்டு சார்புகள் காஃப்மன் தத்துவத்தில் மையமாக இருக்கிறது. இனவெறுப்பு இருந்தால் அவ்வினத்தின் எந்தக் குறியீடும், பிடிக்காத உணர்வுகளைத் தூண்டுவதாக இருக்கும்.

ஒரு இனம் ஆபத்தை எதிர்நோக்கும் பொழுது, தத்துவங்களைச் சார்ந்த குறியீட்டு சார்புகள், அவ்வினம் எவ்வாறு ஆபத்தை எதிர்நோக்குகிறது? என்பதைத் தீர்மானிக்கிறது. அடங்கிப்போகும் தத்துவம் கொண்டவர்கள், எதிர்க்காமல் அடங்கி விடுவர். எதிர்த்து போரிடும் தத்துவம் சார்ந்தவர்கள் எதிர்த்துப் போரிடுவர். எந்த அமைப்புகள் மக்களுக்குப் பிடித்த குறியீடுகளைப் பயன்படுத்துகிறதோ, அதை மக்கள் விரும்புவர். பிடிக்காத குறியீடுகளைக் கொண்ட அமைப்புகளை மக்கள் வெறுப்பர்.

எந்தத் தலைவர் மக்களுக்குப் பிடித்த குறியீடுகளைப் பயன்படுத்துகிறாரோ, அந்த தலைவரை மக்களுக்குப் பிடிக்கிறது. சிலநேரம் ஒரு தலைவரே பிடித்தக் குறியீடாக மாறிப்போகிறார். அப்பொழுது அவரின் பின்னால் மக்கள் குருட்டுத் தனமாக செல்கின்றனர். நடிகர்கள் அரசியலில் வெல்வதும் இதனால்தான்.

பெரும்பாலும் மக்கள் குறியீட்டு சார்புகளின் வழியாகவே அரசியல் ஆதரவைத் தீர்மானிக்கின்றனர், பகுத்தறிவின் அடிப்படையில் நன்மை, தீமைகளை ஆராய்ந்து அல்ல.

***"Most of the times in politics, symbolic predispositions - ideology, values, prejudices, are what matters most."***

இன அரசியலில், இரு இனங்களுக்கிடையே எவ்வளவு ஓரவஞ்சனை ***(Prejudice)*** உள்ளதோ, அதனைப் பொறுத்தே கையும் இருக்கும். ஓரவஞ்சனை என்பது இவர்கள் இப்படித்தான் என்ற முத்திரை குத்துதல், எதிர்ப்பான உணர்வுகளைக் கொள்ளுதல், எதிராக நடந்து கொள்ள விரும்புதல் என்ற வகையில் வெளிப்படும். உதாரணமாக அர்மேனியர்கள் துருக்கியர்களை "இனக்கொலை செய்யும் காட்டு மிராண்டிகள், எதிரிகள், பலமானவர்கள், ஆனால் பண்பாட்டிலும் தகுதியிலும் தாழ்ந்தவர்கள்" என்று கருதுகின்றனர். இது மாதிரியான ஓரவஞ்சனைகள் மக்களுக்கு அவர்களின் பண்பாட்டின் வழியாகக் கற்பிதங்கள் மூலம் வருகிறது.

கற்பிதங்கள் எவ்வளவு தூரம் ஒரு குழுவிற்கு எதிராக இருக்கிறதோ, அவ்வளவு ஓரவஞ்சனையும் இருக்கும். எவ்வளவு தூரம் ஓரவஞ்சனை உள்ளதோ, அவ்வளவு தூரம் அவர்கள் வேற்றின மக்களுக்கு எதிரான செயல்பாட்டுக்கு ஆதாரவளிப்பார்கள். ஓரவஞ்சனைகள் ஒரு மனிதனின் உள்ளுணர்வில் புகுந்து, அவருக்குத் தெரியாமலே கூட அவரை ஆட்டுவிக்கும் வல்லமை கொண்டது. ஈழத்தில் இனப்படுகொலை நடந்தேறியதற்கு அடிப்படைக் காரணம் தமிழர்கள் மீது மகாவம்சக் கட்டுக்கதைகள் உருவாக்கிய ஓரவஞ்சனையே!.

இனி குறியீட்டு சார்புகள் அரசியலில் எவ்வாறு பயன்படுகின்றன? என இந்திய, ஈழ வரலாற்றிலிருந்து பார்ப்போம். "காந்தியின் வெற்றியைப் புரிந்து கொள்ள அவர் எவ்வாறு குறியீட்டு சார்புகளைப் பயன்படுத்தினார்? என்று பார்க்க வேண்டும்" என்கிறார் காஃப்மன். அன்றைய கல்வியறிவற்ற இந்தியாவில் இருந்த கற்பிதங்கள் எல்லாம் மதம் சார்ந்த கற்பிதங்களே!. அவர் இந்துமத கற்பிதங்கள் வழியாக வரும் குறியீட்டு சார்புகளைப் பயன்படுத்தியே வெற்றி கொண்டார்.

அவர் தன்னை இந்து சாமியார் போல மாற்றிக் கொண்டார். அரசர்கள், மந்திரிகள் ஆகியோர் அரசகுருவிடம் ஆலோசனை கேட்பது போல, தன்னை ஒரு அரசகுருவாக உருவாக்கிக் கொண்டார். அவரின் அகிம்சை தத்துவம் என்பது இந்து, புத்த, சைன மாதங்களில் இருக்கும் ஒரு தத்துவத்தின் வடிவமே!. அவரின்





சதியாகிரகத் தத்துவமே மதக்குறியீட்டைக் கொண்டது. அவரை தெய்வத் தன்மை பொருந்தியவராகவே மக்கள் பார்த்தனர். அவரைக் காண்பது என்பது, ஒரு சாமியாரின் நல்லாசி பெரும் தரிசனமாகவே மக்கள் கருதினர். காந்தியே தன்னை கண்ணனின் ஒரு அவதாரமாக இருக்கலாம் என கருதி இருக்கிறார் என்கிறார் காஃப்மன். அவரைப் பின்பற்றிய பலர், அவரின் சத்தியாகிரகப் பாதையை ஒரு மோட்சத்திற்கான வழியாகவே பார்த்தனர்.

புராணங்களில் ஆசிரமத்தில் போர்முறைகள் கற்றுத் தரப்படுவது போல, காந்தி தனது ஆசிரமங்களில் சத்தியாகிரக போர்ப் பயிற்சி அளித்தார். கண்ணன் பரமாத்மா என்பதுபோல, காந்தி மகாத்மா ஆனார். கண்ணனிடம் சுதர்சன சக்கரம் இருப்பதுபோல, காந்தி இராட்டின சக்கரம் கொண்டு போர் புரிந்தார். மக்களை பஜனைகள் மூலம் கூட்டினார். மொத்தத்தில் அவர் பயன்படுத்திய குறியீடுகள் மக்களை உணர்வுப் பூர்வமாக அவரை நோக்கி இழுத்ததனால்தான் அவரால் வெற்றி அடைய முடிந்தது.

எது அவரின் வெற்றிக்குக் காரணமாக இருந்ததோ, அதுவே இந்து-முசுலிம் ஒற்றுமைக்கும் தடங்கலாக இருந்தது. காந்தி இந்து குறியீடுகளைப் பயன்படுத்தியதால் பெரும்பான்மையான இசுலாமியர்களை அவர் பக்கம் ஈர்க்க முடியவில்லை. அப்பொழுது இந்துத்வ அமைப்புகள் ‘இராம இராச்சியம் அமைப்போம்’ என்றும் இசுலாமியர்களுக்கு எதிராகவும் கருத்துருவாக்கம் செய்து வந்தனர். காந்தியும், ‘இராம இராச்சியம் அமைப்போம்’ என்றது இசுலாமியர்களை அந்நியப்படுத்தியது.

மேலும் இந்துத்துவ அணிகள் இசுலாமியர்களின் மீது ஒரவஞ்சனையைக் கட்டுக் கதைகள் மூலம் பரப்பி இரு தரப்பினரிடமும் பகையை வளர்த்தனர். அவர்கள் ஆங்கிலேயரை விட, இசுலாமியர்களுக்கு எதிராகவே ஏராளமான கட்டுக்கதைகளை உருவாக்கி பரப்பினார்கள். ஆங்கிலேயருக்கு எதிரான கலவரங்களைவிட, இசுலாமியருக்கு எதிரான கலவரங்களே அதிகமாக நிகழ்ந்தன என்கிறார் காஃப்மன். அதைப் போலவே அன்றைய இசுலாமியர்களிடம் இந்துக்களைப் பற்றிய கட்டுக்கதைகளும், ஒரவஞ்சனைகளும் பரப்பப்பட்டன. இவை எல்லாம் சேர்ந்து பகையையும், அச்ச உணர்வுகளையும் பரப்பிப் பிரிவினைக்கும், கலவரத்திற்கும் வித்திட்டன.

புலிகளின் பல போர் வெற்றிகளுக்கும், அவர்கள் குறியீடுகளைப் பயன்படுத்தி மக்களையும், போராளிகளையும் உணர்வுப் பூர்வமான ஆதரவைப் பெற்றது ஒரு முக்கிய காரணம். “புலிகள்” என்ற பெயரும் புலிக் கொடியும் விபத்து அல்ல. மாவீரர்கள் நிகழ்வும்,



மாவீரர்களை விதைப்பதும் பண்டைய புறநானூற்றிலிருந்து எடுத்து வரப்பட்ட குறியீடுகள். அச்சமற்று போர் புரியும் கலையும், புறநானூற்று கதைகளிலின் மூலம் உணர்வுகளால் கட்டி அமைக்கப்பட்டதே!. புலிகள் இயக்கம் உணர்வுகளை மையமாகக் கொண்டு கட்டி எழுப்பப் பட்ட இயக்கம். அவர்கள் போராளிகளை உணர்வுப் பூர்வமாக ஊக்கப்படுத்தியது போல, உலகில் வேறு எந்த இராணுவமோ, போராளிகளோ செய்து விஞ்சியிருப்பார்களா? என்பது சந்தேகமே.

## அச்ச உணர்வுகள்

ஓர் இனம் எவ்வளவு தூரம் ஓரவஞ்சனை கொண்டுள்ளார்களோ, அவ்வளவு தூரம் வேற்றின மக்களிடமிருந்து ஆபத்தை உணர்வார்கள். ஆபத்தை உணரும் குழுவில், ஒற்றுமை கூடி இன அடையாளம் பலம் பெறும். அதே நேரம் மற்ற இனங்களின் மீது எதிர்ப்பும், பாரபட்சமும் கூடும். அவ்வாறு இருக்கும் பொழுது மற்ற இனங்களின் மீதான அடக்குமுறைக்கு ஆதரவு அளிப்பர்.

ஓர் இனம் தனது இருப்புக்கு, உயிருக்கு ஆபத்து என்று உணரும்பொழுது, அவர்கள் எதிர்த்துப் போரிடுவதற்கு அவர்களுக்குள் ஆதரவு பெருகும். அச்ச உணர்வுக்கு கொண்ட மக்கள், மற்றவர்கள் துன்பத்தைக் கண்டுகொள்ளாத, எதிர்க்கும் மனப்பான்மையுள்ள, தேசிய சிந்தனையுள்ள, சகிப்புத்தன்மையற்ற மக்களாக மாறுவர்.

எதிரி மிகுந்த பலத்துடன் அச்சுறுத்தும் பொழுது, ஓர் இனத்திற்கு எதிர்த்துப் போரிடும் வலிமை இல்லாவிட்டால், அமைதியாகப் பணிந்து செல்லும். அந்நிலையில் எதிர்த்து போரிடுவதற்கான ஆதரவு குறையும். அச்சுறுத்தல் எதிர்கொள்ளும் படியாக இருந்தால், இனம் எதிர்த்துப் போராடலாம், அது வன்முறையாகவும் இருக்கலாம்.

ஓர் இனம் அச்சம் கொண்டு எதிர்வினை ஆற்றும்பொழுது, எதிர் இனத்திற்கு அச்சம் மேலும் கூடுகிறது, அவர்களின் ஓரவஞ்சனைகளும் கூடுகிறது. இவ்வாறு ஒருவர்மீது இன்னொருவருக்கான அச்சம் கூடி, இனங்களுக்கிடையே பிளவு ஏற்பட்டு, பல கலவரங்கள் நடக்கின்றன. இந்துத்துவ அரசியல் இந்த தத்துவத்தைப் பயன்படுத்தியே தங்களை வளர்த்துக் கொண்டு வருகின்றன. ஓரவஞ்சனை இல்லாவிட்டால், அச்சம் தோன்றுவதில்லை. அது போன்ற நிலையில், அரசியல் என்பது பெரும்பாலும் எவ்வாறு பொருளாதாரப் பயனைப் பங்கிடுவது? என்றே இருக்கும்.



கல்லெறி வேலுப்பிள்ளை

# "என்ன கொடுமை சரவணா!"



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. திலீபன் நினைவு நாள் இப்பதான் கடந்துபோய்ச்சுது கண்டியளோ. இனத்துக்காக பன்னிரண்டு நாள் உணவை ஒறுத்து இருந்த ஓர் அசாதாரணப் புனிதன் திலீபன். இந்த நினைவு நாளை குழப்புறதுக்கெண்டு வருடாவருடம் ஒவ்வொரு விதமா ராகு கேதுக்கள் மனித வடிவத்திலே வரும். இந்தமுறையும் அதுதான் நடந்தது. ஆனால் இந்தமுறை படுமோசமாவும் மிகக் கேவலமாவும் இந்தக்குழப்பங்கள் நடந்தது கண்டியளோ.**

நினைவேந்தலைக் குழப்பும் விதமாக நடந்துகொண்டவர்கள் தொடர்பில் அகரம் தன்னுடைய வன்மையான கண்டனங்களையும், வேதனையையும் இதில அடையாளப்படுத்துறதில தயக்கமின்றி முன்னிற்குது பாருங்கோ.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும் எண்டுறதுதான் திலீபனின் வாசகம் பாருங்கோ. மக்கள் கிளர்ந்தெழுந்தால் தான் போராட்டம் வீறுநடை போடும் கண்டியளோ. மக்கள் இல்லாமல் போராட்டம் எங்கயும் நடந்ததாக வரலாறு இல்லை. அந்த மக்களிலிருந்துதான் திலீபனும் வந்தவன். அதனால அவன் தன்னுடைய உள்ளக்கிடக்கையை அப்படியே வெளிப்படுத்தியது தான் இந்த வாசகம். திலீபனின்ர உணவு ஒறுப்புப் போராட்டத்துக்குப் பிறகுதான், தமிழீழ விடுதலைப்போராட்டம் ஓர் புதிய பரிமாணம் எடுத்தது எண்டால் அது மிகையில்லை கண்டியளோ.

மருத்துவ பீட மாணவனான திலீபன் தன்னுடைய கல்வியை தமிழரின் வாழ்விற்காக அர்ப்பணித்தான். அதன்பிறகு ஏராளமான மாற்றங்கள் போராட்டத்தில நிகழ்ந்தது பாருங்கோ. இந்திய இராணுவத்தின் முகமூடி கிழிக்கப்பட்டதும், தமிழ்மக்கள் மீது இந்தியா திணிக்கவிருந்த ஒப்பந்த மாயை கிழித்தெறியப்பட்டதும் இதன் பிறகுதான் பாருங்கோ. அதனால திலீபனை எங்களுடைய இனத்தின் முகமாகவே தமிழ் மக்கள் அடையாளப்படுத்துகினம்.

2009 வரை தமிழீழ மக்கள் திலீபனின் நினைவுநாட்களை வெறும் அடையாள நாட்களாக மட்டும் நினைவு கூரவில்லை கண்டியளோ. அந்த நாளில வீதிகளைத் தூய்மைப்படுத்துறது, மாணவர்களுக்கு போராட்டப்பாதையின் அவசியத்தை விளங்கப்படுத்துறது, பாடசாலைகள்

தோறும் கலைநிகழ்வுகளை நடத்துறது, அடையாள உணவு ஒறுப்பு போராட்டத்தை நடத்துறது எண்டு எல்லாவிதமான வகைகளிலையும் திலீபனின்ர நினைவு நாள் அடையாளப்படுத்தப்பட்டு சிறப்பிக்கப்பட்டது எல்லாருக்குமே தெரியும் பாருங்கோ.

ஆனால் 2009 இற்குப் பிறகு, தமிழீழம் முற்றுமுழுதாகச் சிதைக்கப்பட்ட பிறகு, மாவீரர்களை நினைவு கூறுவதில் தடைகள், கைதுகள் எண்டு பிரச்சனைகளுக்கு ஈழத்தமிழினம் முகம் கொடுக்க வேண்டியதா போச்சு பாருங்கோ. அதனால தமிழீழத்திற்கு வெளியே வாழுகின்ற தமிழர்களால் மட்டும் இந்த நினைவுநாட்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

பிறகு ஏதோ ஒருவழியில 2016 ஆம் ஆண்டு அந்த இடத்தைச் சிலர் தூய்மைப்படுத்தி விளக்கேற்றி திலீபனை நினைவு கூறக்கூடிய வாய்ப்பு வந்தது பாருங்கோ. ஆனால் அது அந்த நாளில மட்டும் தான் சாத்தியமானது பாருங்கோ. அதற்குப் பிறகு வந்த காலத்தில "திலீபன் வழியில் வருகிறோம்" எண்ட பெயரிலே திலீபனின் நினைவை ஒட்டி தாயகமெங்கும் திலீபனின்ர உருவப்படத்தை தாங்கிய ஊர்தி உலாவந்து மக்களது வரவேற்பைப் பெற்றது எல்லாருக்கும் தெரியும் கண்டியளோ.

அந்தக் காலச் சூழ்நிலையில இந்த ஊர்தி உலாவை நடாத்தக்கூடிய வாய்ப்பும், துணிவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எண்டுற கட்சிக்கு மட்டும்தான் அமையப்பெற்றது

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

பாருங்கோ. அந்த நிகழ்வுக்குப் பிறகு ஒவ்வொருவருடமும் இது தொடர்ச்சியாக நடந்துவந்தது. பிறகு மீளவும் கோத்தபாய அரசினுடைய கெடுபிடிகள் காரணமாக யாராலயும் எதையும் அந்த செய்யமுடியேல்ல பாருங்கோ.

இந்தவருடம் திரும்பவும் அதற்குரிய வாய்ப்பு வந்ததால, அதே கட்சியைச் சேர்ந்த அனைவரும் மீளவும் திலீபனின் உருவப்படத்தைத் தாங்கிய ஊர்தியை கிழக்கு மாகாணத்திலிருந்து தொடங்கி வடக்கு நோக்கி நகரத்தொடங்கினார்கள். இம்முறை வழமைக்கு அதிகமாக மக்கள் கூடியது எல்லாருக்கும் திகைப்பையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கிப்போட்டுது பாருங்கோ. இதைப் பாத்துக்கொண்டிருந்த சிங்கள அரசின் அல்லக்கைகளுக்கும் இந்தியத் தரப்பிற்கும் மூக்கில வியர்த்துப்போட்டுது பாருங்கோ.

உடனே இதை இந்த வருடத்திற்குள்ள குழப்பியடிக்காட்டில் திரும்பவும் தமிழர்கள் எழுச்சி பெறப்போகினம் எண்டது நல்லாவே தெரிஞ்சிட்டுது கண்டியளோ. உடன தாங்களும் போராளிகள் எண்ட பெயரிலே ஏற்கனவே ஊருக்குள்ள உலாவின சிலருக்கு



இதைக்குழப்பி, சிங்கள அரசிட்ட நல்ல பெயர் வாங்க இதைவிடச் சந்தர்ப்பம் கிடையாது எண்டதும் தெரிஞ்சுபோச்சு பாருங்கோ.

ஜனநாயகத்தை தங்கட போராட்டத்தில நுழைச்ச 2009 க்குப் பிறகான போராளிகள் இதுக்குள்ள ஆர்வமா நிண்டினை பாருங்கோ. அவைக்கு ஒரே கல்லிலே மூண்டு பிலாப்பழம் விழுத்துறதுதான் திட்டம் கண்டியளோ. முதலாவது மக்கள் முன்னணிக்கு மேல சேறடிச்சு அந்த வாக்கு வங்கியைத் தங்கட பக்கம் திருப்புறது முதன்மையான தேவை. இரண்டாவது நினைவேந்தலைக் குழப்புவதினூடாக அடுத்த வருடத்தில் இருந்து நினைவு நிகழ்வுகளைக் கைப்பற்றி எல்லாத்தையும் நீர்த்துபோகச் செய்யுறது.

அதைவிட தமிழ்த் தேசிய தளத்திற்கு எதிரான சக்திகளை இதனூடே நட்புக் கொண்டு தங்களை நிலைப்படுத்திக் கொள்ளுறது எண்ட மூன்றும்தான் இதனுடைய அடிப்படை. இது தெரியாமல் சில நேர்மையான நல்லுள்ளம் கொண்டவர்களும் இதற்குள் போய் சிக்கிக்கொண்டு "கரண்டு கம்பியில இருந்த காக்கா" கணக்கில சிக்கிச் சின்னாபின்னமாகிப் போனது பெரும்பாவம் பாருங்கோ.

இதில பெரிய பகிடி என்னவெண்டால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை இதோட அடிச்சு உடைச்சு நல்ல பிள்ளை பட்டம் வாங்க முயன்ற மணிவண்ணன் மற்றும் பார்த்திபன் குழுவும் இவர்களோட கைசேர்ந்ததுதான் பாருங்கோ. தமிழ்த் தொலைக்காட்சி நடாத்திய நேர்காணல் நிகழ்வில போயிருந்து, நினைவு நிகழ்வைக் குழப்பியது யார் எண்ட கேள்விக்கு, முன்னணியை விரட்டுறதுதான் எங்கட கொள்கை எண்டு வாய்தவறிச் சொல்லி மாட்டிக்கொண்ட ஜனநாயகத்தை வாங்கின கூட்டம் தங்களுடைய திருட்டை மறைக்க மறந்து மாட்டிக் கொண்டினம் பாருங்கோ. இப்ப விசயத்துக்கு வாறன் பொறுங்கோ.

திலீபன் நினைவேந்தலை யாரும் நடத்தலாம், அதை எங்கும் நடத்தலாம். அந்த இடத்தில அண்டைக்கு நேரம் இல்லையெண்டால் அடுத்த நாள் போயும் நடத்தலாம். எனக்கு அண்டைக்கு விளக்கு கொளுத்தினால் தான் நான் மகிழ்ச்சியடைவேன் எண்டு திலீபன் எங்கயும் சொல்லேல்லை. அதோட திலீபன் விரும்பியது மக்கள் புரட்சியைத்தானே தவிர, போராளிகள் புரட்சியையோ அல்லது



Opening hours : Mon-Sat 10.00am - 20.00pm
https//www.facebook.com/sari1fashionhouse



விளக்கேத்துற புரட்சியையோ இல்லை கண்டியளோ. திலீபனின் மீது பற்றுகொண்டவர்கள் இதை முழுமையாக ஏற்றுகொள்ளுவினம் பாருங்கோ.

குறித்த நாளில அந்த இடத்தில திலீபன் நினைவாக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டுவிட்ட பிறகு, அந்த தீபத்தைப் பறித்து எறிய முயன்றது ஏன் யார் ? அது ஏன் எண்ட கேள்விக்கு இண்டுவரையில பதில் இல்லை பாருங்கோ. ஆனால் இந்தக்கேள்விக்கு சுற்றிவளைச்சு பலவிதமான பதில்களை ஜனநாயகக் கட்சிக்காரர் தருகினம். நாங்கள் முன்னாள் போராளிகள், திலீபன் எங்கட தோழன் எண்டு ஒருத்தர் காணொளியில துள்ளிக்குதிச்சதைப் பார்த்து எனக்கு சிரிச்சு மாளேல்லை கண்டியளோ. திலீபன் அண்ணை உணவு ஒறுத்துப் போராட்டம் நிகழ்த்தின காலத்தில இவன்ர தகப்பன் கலியாணம் கட்டியிட்டுதோ எண்டு தேடவேணும்.

அதுக்குப்பிறகு பிறந்த இவன் அதில நிண்டு திலீபன் என்ர தோழர், எனக்குதான் விளக்கேத்த உரிமை இருக்கெண்டு ஊளையிடுது பாருங்கோ. நான் அந்த இடத்தில நிண்டிருந்தால், ஆளைத் தனியக்கூட்டிக் கொண்டு போய், வடிவேலு போட்டிருந்த டுபாய் சட்டையை பார்த்திபன் கழட்டினமாதிரி கழட்டி ஆளை உடுப்பில்லாமல் ஓடவிட்டிருப்பன் கண்டியளோ. தலைவர் 2009 இல போராட்டத்தை மௌனிச்சபிறகு, இஞ்ச போராளி எண்டு யாரும் இல்லை. எல்லாரும் மக்கள் தான். நான் படிச்ச பள்ளிக்கூடத்தில இருந்து நான் வெளியில வந்தபிறகு வேணுமெண்டால் , பழைய மாணவர் சங்கத்தில இருக்கலாம். அதுக்காக நான் இப்பவும் மாணவன் தான் எண்டால் ஒண்டில ஆளுக்கு விசர். அல்லது ஆளுக்கு பச்சை மட்டை வைத்தியம் தேவைப்படுகுது எண்டு பொருள் கண்டியளோ.

என்னைப் பொறுத்தவரைக்கும், கட்சியோ அல்லது மக்கள் குழுவோ, அல்லது தனிநபரோ ஓர் நினைவேந்தலையோ அல்லது இனவிடுதலைச் செயற்பாட்டையோ நேர்த்தியாகச் செய்கிறார்கள் என்றால் அதை குழப்பாமல் விட்டுடவேணும் கண்டியளோ. அதுதான் இனவிடுதலைச் செயற்பாட்டாளனுக்கு அழகு. அந்த நினைவேந்தலைச் செய்யுறதாலதான் அந்த கட்சிக்கு வாக்குவங்கி நிரம்பப் போகுது எண்டு விசர்முத்தினவன் கணக்கில நினைச்சால், நீயும் வேற நினைவேந்தலை வேற இடத்தில செய்து உன்ர வாக்கு வங்கியைப் பெருக்கன் கோதாரி. உந்த மண்ணிலே நடந்த போராட்டத்தில எத்தனை விதமான தியாகங்கள் நடந்து முடிஞ்சுது. ஏன் உந்த மண்ணில நினைவேந்தலுக்கே பஞ்சம்..? நடந்த நிகழ்வுகளைக் குழம்பிப் போட்டு, அதுக்கு அகராதி விளக்கங்களும் குடுத்து, அதிலையும் பல்லிளிச்சு நிண்டதுதான் மிச்சம் கண்டியளோ.

பிரபாகரன் இல்லைஎண்டுறது சிங்களவனுக்கும் இந்தியாக்கும் சந்தோசமோ இல்லையோ, உங்களை மாதிரி சில ஜனநாயகத்தில பிரண்ட கீரிப்பிள்ளையளுக்கு பெரிய சந்தோசம் எண்டுறது நல்லாத்தெரியுது பாருங்கோ. இவனுகளைக் காலம் கருவறுத்துத் துலைக்குதோ இல்லையோ எண்டு இருந்து பாருங்கோ.

**“ஒரு சில பேர்கள் ஒரு சில நாட்கள்**
**உண்மையின் கண்களை மூடி வைப்பார்**
**பொறுத்தவர் எல்லாம் பொங்கி எழுந்தே**
**மூடிய கண்களை திறந்து வைப்பார்**

**கால்கள் இருக்க கைகள் இருக்க**
**கவலைகள் நம்மை என்ன செய்யும்?**
**உழைப்பது ஒன்றே செயல் எனக் கொண்டால்**
**நடப்பது நலமாய் நடந்துவிடும்”**

-அப்ப வரட்டே

Smt. விதியா மயூரன், சுவிஸ்

## 2.திரிபதாக விநியோகஹ

மகுடே வ்ருக்ஷபாவேஸ வஜ்ரே தத்தரவாஸவே / கேதகீ குஸுமே தீபே வன்ஹிஜ்வாலா விஜ்ரும்பனே / கபோதே பத்ரலேகாயாம் பாணார்த்தே பரிவர்த்தனே / யுஜ்யதே திரிபதாகோயாம் கதிதோ பரதோத்தமைஹி /

### கருத்து

| | |
|---|---|
| மகுடே | - கிரீடம் (முடி) |
| வ்ருக்ஷபாவேஸ | - மரக்கிளை |
| வஜ்ரே | - வஜ்ராயுதம் |
| தத்தரவாஸவே | - இந்திரன் |
| கேதக்குஸுமே | - தாழம்பூ |
| தீபே வன்ஹிஜ்வாலா | - விளக்கு (தீபம்) |
| விஜ்ரும்பனே | - நெருப்புச்சுவாலை |
| கபோதே | - புறா |
| பத்ரலேகாயாம் | - உடலில் வரையப்படும் அலங்காரம் |
| பாணார்த்தே | - அம்பு |
| பரிவர்த்தனே | - சுற்றிவருதல் |

யுஜ்யதே திரிபதாகோயாம் கதிதோ பரதோத்தமைஹி

## 3. அர்த்தபதாக விநியோகஹ

பல்லவே பலகே தீரே உபயோரிதி வாசகே / க்ரகசே சுரிகாயாம்ச த்வஜே கோபுரஸ்ருங்கயோகோ / யுஜ்யதே அர்த்தபதாகோயம் தத்தக் கர்ம ப்ரயோககே /

### கருத்து

| | |
|---|---|
| பல்லவே | - இளந்தளிர் (குருத்து) |
| பலகே | - பலகை |
| தீரே | - ஆற்றங்கரை |
| உபயோரிதி வாசகே | - இரண்டு எனல் |
| க்ரகசே | - வாள் (அரம்) |
| சுரிகாயாம்ச | - சிறு கத்தி |
| த்வஜே | - கொடி |
| கோபுர | - கோபுரம் |
| ஸ்ருங்கயோகோ | - கொம்புகள் |



யுத்யதே அர்த்தபதாகோயம் தத்தக் கர்ம ப்ரயோககே

### 4. கத்தரீமுக விநியோகஹ

ஸ்திரீபும்ஸயோஸ்து விஸ்லேஷ விபர்யாஸ்பதேபிவா / லுண்டனே நயனான் தேச மரணே பேதபாவனே / வித்யுதர்தே ஏகசையா விரஹே பதனேத்தா / லதாயாம் யுஞ்யதே யஸ்து ஸகரஹ் கத்தரீமுகஹ /

கருத்து

| | |
|---|---|
| ஸ்திரீபும்ஸயோஸ்து விஸ்லேஷே | - ஆண், பெண் வேற்றுமை |
| விபர்யாஸபதேபிவா | - இது அல்லது அது |
| லுண்டனே | - உருளுதல் |
| நயனான்தேச | - கடைகண் |
| மரணே | - மரணம் |
| பேதபாவனே | - வேறுபாடு |
| வித்யுதர்தே | - மின்னல் |
| ஏகசையா விரஹே | - தனிமையில் உறங்கும் போது ஏற்படும் தவிப்பு |
| பதனேத்தா | - விழுதல் |
| லதாயாம் | - கொடி |

யுஞ்யதே யஸ்து ஸகரஹ் கத்தரீமுகஹ




# DORTMUND மாநகரத்திலே
# தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்
# உணவுப்பொருட்களை மொத்தமாக
# பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**வாடிக்கையாளர் அனைவருக்கும்**
**இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்**

StaR-Impex




## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

Rabeena – Since 1986 – We've Mastered Taste
Aachi – The Mother of Good Taste
BTM
Double Horse – Bringing Health to Life

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

TRS – ASIA'S FINEST FOODS




MDH · Laziza International · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · AKASH Basmati · Rubicon · Tilda Legendary Rice
Nestlé · PG tips · Niru Brand · AROY-D · MTR · AASHIRVAAD · Pillsbury · PATAK'S Original · Laila



சண் தவராஜா

# முன்னாள் போராளி

‘போராளி’ என்றதும் பொதுவாக பெரும்பாலானோரின் நினைவில் முதலில் இடம் பெறுபவர் சே குவேரா. ஆர்ஜென்ரீனா நாட்டில் பிறந்த ஒரு மருத்துவரான அவர், கரீபியன் நாடான கியூபாவில் நடந்த போராட்டத்தில் பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து பங்கெடுத்து, போராட்டத்தை வென்று, அந்த நாட்டின் அமைச்சரவையில் அமைச்சராகப் பதவி வகித்துக் கொண்டிருந்த நிலையிலேயே, பதவியைத் துறந்து பல்வேறு நாடுகளிலும் நடைபெற்றுக் கொண்டிருந்த சுதந்திரப் போராட்டங்களில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொண்டவர்.

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கு கொண்டிருந்த வேளை 1967ஆம் ஆண்டு அக்டோபர் 9ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.யின் ஆலோசனையின் பிரகாரம் சுட்டுக் கொல்லப்பட்டவர்.

புரட்சிகரக் கருத்துகளைக் கொண்டவராக விளங்கிய சே, 1955ஆம் ஆண்டு யூன் மாதத்தில் பிடல் காஸ்ட்ரோவின் சகோதரர் ரவூல் காஸ்ட்ரோவை முதலிலும், அடுத்து பிடலையும் சந்தித்தார். பிடலைச் சந்தித்த முதல் நாளிலேயே, இருவரும் இரவிரவாக நடத்திய உரையாடலின் பின்னர் பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான யூலை 26 இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார் சே. அன்றிலிருந்து அவர் இறக்கும் வரை அவர் ஒரு மக்கள் விடுதலைப் போராளியாகவே வாழ்ந்து மறைந்தார்.

1955 யூனில் கியூப விடுதலையை இலக்காகக் கொண்ட இயக்கத்தில் இணைந்து போராடி, 1959 யனவரி 1இல் வெற்றியைப் பெற்றதோடு, தனது போராட்டப் பணி முடிந்து விட்டதாக சே கருதவில்லை. தனது உலகளாவிய இலட்சியம் வெற்றிபெறும் வரை தாம் ஓயப் போவதில்லை என்ற உறுதியின் வெளிப்பாடாகவே அவர் கொங்கோவிலும், பொலிவியாவிலும் ஆயுதப் போராட்டங்களில் பங்கு கொண்டமையை நிச்சயமாகக் கருதலாம்.

‘போராளி’ என்பவன் வாழ்நாள் முழுமைக்கும் ஆனவன். அவனது போராட்டம் உலகம் முழுமைக்குமானதோ, நாட்டின் எல்லைக்குள் மட்டுப்பட்டதோ அது என்றுமே முற்றுப் பெற்றுவிடும் ஒன்றல்ல. தனது மக்களின் அடிமைத் தளையை உடைத்தெறிந்து விட்டாலும், அவர்களின் நலவாழ்வை மேம்படுத்தும்




Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

IMPORTAS

*International Foods & Beverages*

www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்

Schwaresterstrasse 2, 5604 Hendschiken

Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

செயற்பாடுகளைத் தொடர்ந்தே ஆகவேண்டும். அதற்காக ஆயுள் காலம் முழுமைக்கும் உழைக்க வேண்டும்.

அண்மையில், விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திலீபனின் நினைவு தினத்தை ஒட்டி, யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெற்ற தள்ளுமுள்ளுகளும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கருத்தாடல்களில் எழுப்பப்பட்ட போராளி, முன்னாள் போராளி என்ற சொற்பதங்கள் தொடர்பிலுமான செய்திகளை வாசித்த போதில், எனது மனதில் தோன்றிய முதல் ஆளாக சே குவேரா இருந்தார்.

உலக மக்களின் விடுலைக்காகப் போராடிய பொதுவுடைமைவாதியான சே குவேரா எங்கே? ஈழ மண்ணில் தேசிய விடுதலைக்காகப் போராடிய புலிகள் எங்கே? அவரோடு இவர்களை எப்படி ஒப்பிடலாம்? என்ற கேள்வி பலருக்கும் எழக் கூடும். அந்தக் கேள்வி நியாயமானதும் கூட. ஆனால், எனது நோக்கு 'போராளி' என்ற வரையறை பற்றியதே!.

'போராளி' என ஒருவன் தன்னை வரையறை செய்து கொண்டு, அதற்கான இலட்சியப் பாதையில் என்று முதலாவது காலடியை எடுத்து வைக்கின்றானே அன்றிலிருந்து அவனது உயிர் பிரியும் வரைக்கும் அவன் போராளியே என்பது எனது கருத்து. போராளியாக இருந்து போராட்டத்தைக் கைவிட்டவர்களை முன்னாள் போராளிகள் என அழைப்பது தவறா? என்ற கேள்வி எழக் கூடும். என்னைக் கேட்டால் போராளிகள் என்றுமே தமது போராட்டத்தைக் கைவிட மாட்டார்கள்.

போராட்ட வடிவங்களை அவர்கள் மாற்றிக் கொள்வார்களே தவிர, போராட்டங்களை அவர்கள் கைவிட மாட்டார்கள், உண்மையான போரளிகளால் அவ்வாறு தாம் நேசித்த போராட்டங்களைக் கைவிடவும் முடியாது. அவ்வாறு ஒருவர் தான் போராட்டத்தைக் கைவிட்டதாகக் கூறினால், அவர் உண்மையான போராளி இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

ஈழப் போராட்டத்தில் ஆரம்பம் முதலே ஆயுதம் ஏந்தியவர்கள் மாத்திரமே போராளிகளாகக் கருதப்பட்டார்கள். ஆயுதம் ஏந்தாத, அரசியல் துறையில் பணியாற்றியோர் போராளிகளாகக் கணக்கில் கொள்ளப்படவில்லை, அல்லது தகுதி குறைந்த போராளிகளாக(?)ப் பார்க்கப்பட்டார்கள். 2009 மே மாதத்தில் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தபோது போராளிகளாக இருந்தவர்கள் 'முன்னாள் போராளிகளாக' மாறிப் போனர்கள், அல்லது அவ்வாறு மாற நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்.

அன்றைய காலகட்டத்தில் விடுதலைப் புலிகளைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக தம்மை இனங்காட்டிக் கொள்ள முடியாத பயங்கரச் சூழல் இருந்ததை மறுத்து விடுவதற்கில்லை. ஆனால், இன்றைய சூழலில் போராளிகளாகத் தம்மை அழைத்துக் கொள்ளாது விட்டாலும், அவர்கள் போராளிகளாக வாழ்வதைத் தடுத்துவிட முடியாது. இது தாயகத்தில் மாத்திரமன்றி, புலத்திலும் வாழும் ஆயிரக் கணக்கானோருக்கும் பொருந்தும்.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட காக்கா அண்ணன், தன்னை முன்னாள் போராளி என விளித்துக் கொண்டாலும், அவர் அன்றும், இன்றும், என்றும் போராளியே என்பதை அவரது செயற்பாடுகள் உறுதி செய்கின்றன. ஆனால்,



அவரையும் ‘முன்னாள் போராளி’ என்ற சொல்லாடலில் கருணா அம்மானையும் சமப்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், பொன்னம்பலம் போன்றவர்கள் முயற்சி செய்வது கேவலமான அரசியலே அன்றி வேறில்லை. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்தக் கதையாக இன்று விடுதலைப் புலிகளையே பரீட்சித்துப் பார்க்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முற்படுவதைப் பார்க்க முடிகின்றது.

மனிதகுல வரலாற்றில் பல்லாயிரம் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. தற்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நடைபெற்ற போராட்டங்கள் யாவுமே வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை. பல நூறு போராட்டங்கள் இரும்புக் கரம் கொண்டு நசுக்கப் பட்டிருந்தாலும், அந்தப் போட்டத்திற்குத் தலைமை தாங்கிய சக்திகள் சூழலுக்கு ஏற்பத் தம்மைத் தகவமைத்துக் கொண்டு, வேறு வடிவங்கள் ஊடாக தமது இலட்சியத்தை அடைய முயற்சிகளை மேற்கொண்ட வண்ணமேயே உள்ளன. இதற்கு வரலாறு நெடுக பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

எனினும், துர்வாய்ப்பாக ஈழத்தில் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் அடுத்த கட்டம் தொடர்பில் துல்லியமான அறிகுறிகள் எதுவும் 13 வருடங்கள் கடந்தும் தென்படாத சூழலே உள்ளது. இது யார் குற்றம்? இதற்கு யார் பதில் சொல்வது?

எதிரிகளை நிலைகுலையச் செய்வதற்காக புதிய புதிய களமுனைகளைத் திறப்பது ஒருவகை போரியல் தந்திரம். எதிரிகளின் ஒருங்கிணைவைத் தளர்த்தி, அவர்களைப் பரவலாக்கி, செறிவைக் குறைப்பதன் ஊடாக, அவர்களை வெற்றி கொள்வது எளிதாகி விடும். அரசியலிலும் இதுபோன்ற தந்திரங்கள் பாவிக்கப்படுவது வழக்கம். இன்றைய நிலையில், ஈழத் தமிழர் அரசியலில், கட்சிகள் பலவாறாக இருந்தாலும், ஐக்கியத்தை ஏற்படுத்தி, தம்மிடமுள்ள வளங்களை ஒருங்கிணைத்து, இலட்சியத்தை வென்றெடுப்பது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதை விடுத்து, மேலும் மேலும் பிளவுகளை ஏற்படுத்துவது யாரின் நலன் சார்ந்தது? என்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

‘எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே’ என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகள் ஈழத் தமிழரைப் பொறுத்தவரை வெற்று வாக்கியம்தானா? ●



# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




www.jaffnastores.com
info@jaffnastores.de

Tel. - 0521 174794
Mobile - 01732807906

Feilenstraße 8
33602 Bielefeld



Radio - by - Phone

18 ஆம் ஆண்டில்....

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60

மேலதீக விபரங்களுக்கு...
www.etr.fm

மகிழ்வுடன்.... அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music

பூபதி பெரியசாமி

மாலை 5.00 மணி..

திடீரென ஆங்காங்கே வன்முறைகள் ஆரம்பித்தன. நகரத்து முக்கிய வீதிகளில் இருந்த அனைத்துக் கடைகளும் 'சட்'டென அடைக்கப்பட்டன. பதற்றமும், குழப்பமுமாய் மக்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தனர்.

"ஏம்பா.. என்னாச்சு..? ஏன் கடைய எல்லாம் அடைக்கறீங்க?" பலரின் கேள்விக்கு விடை கிடைக்காததால், பொதுமக்கள் மனமும் கலவரப்பட்டுக் கிடந்தது.

அப்போது, திடீரெனப் பேருந்துகள் மீது கல் வீச்சு சம்பவங்களும் ஆரம்பித்தன. சற்று நேரத்தில் போக்குவரத்தும் அறவே தடைபட்டது. பயணத்துக்குக் காத்திருந்த பலரது செல்போன்களும் படுபிசியாய் செய்தியைப் பரிமாறியபடி இருந்தன.

"என்னங்க.. பேருந்தெல்லாம் திடீர்னு நிறுத்திட்டானுங்க. ஊரெல்லாம் ஒரே கலவரமா இருக்கு. என்னன்னு தெரியல. நான் ரொம்ம நேரமா காத்திருக்கேன். ஒரு பேருந்தும் ஓடல. என்ன செய்யறதுன்னு தெரியல.."

"இல்லப்பா.. ஆட்டோவும் எதுவும் ஓடல. அங்கங்க பேருந்து மற்றும் ஆட்டோமேல கல் வீசி எறியறதால, வண்டிய யாரும் எடுக்கல. நீங்க கவலைப்படாதீங்கப்பா. நிலைமை ஓரளவு சரியானதும் எப்படியாவது வீட்டுக்கு வந்துடறேன்.."

"வலியக் கொஞ்சம் பொறுத்துக்கோம்மா. எப்படியும் நாம மருத்துவமனைக்குப் போயிடலாம். நல்ல படியா பிரசவம் நடக்கும். எதுக்கும் கவலைப்படாம, நம்ம குலசாமிய வேண்டிக்கோ.."

இப்படியே.. வீடு திரும்ப இயலாமல், பேருந்து நிலையத்தில் தவித்துக் கொண்டிருந்த பலரும், பெரும் தவிப்புடன் செய்வதறியாது விழித்துக் கொண்டிருந்தனர். நிலைமை உடனே சீராக வாய்ப்பில்லாததை உணர்ந்த பலரும், அங்கிருந்து நகர்ந்து நடந்து செல்லத் தொடங்கினர்.

நகரத்தின் அனைத்துச் சாலைகளிலும், சுழல் விளக்குகளுடன் அலறும் ஒலி பெருக்கி பொருத்தப் பட்டிருந்த போலீஸ் வாகனங்கள் மட்டுமே சுற்று சுற்றி வலம் வந்து கொண்டிருந்தன.

அப்போது.. இரண்டு காவல் துறை அதிகாரிகளின் தலைமையில், துப்பாக்கி ஏந்திய இருபது காவலர்கள் அடங்கிய குழு ஒன்று பேருந்து நிலையத்தின் வாசலில் 'திபுதிபு'வென வந்திறங்கியது.

காவலர்களின் அணிவகுப்பு முடிந்த பிறகு, குழுவைத் தலைமையேற்று நடத்தி



வந்த காவல்துறை அதிகாரி, காவலர்களுக்கு சில உத்தரவிட்டுக் கொண்டிருந்தார்.

அதன் பின்னர், துப்பாக்கி ஏந்திய நான்கு காவலர்கள் பேருந்து நிலைய வாயிலில் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்த ஒரு 'டிஜிட்டல் பேனரை'ச் சுற்றி நின்று பாதுகாப்புக் கொடுத்தனர்.

புதிதாகத் தொடங்கப்பட்ட ஒரு கட்சித் தலைவரின் பிறந்த நாளையொட்டி நகரப் பேருந்து நிலையத்தின் வாசலில் வைக்கப்பட்டிருந்த அந்த 'டிஜிட்டல் பேனரை' யாரோ கிழித்து விட்டனர் என்பதும், அதற்காகவே இந்த வன்முறைகளும், கலவரங்களும் என்பதும் பிறகுதான் தெரிந்தது.

அடுத்த சில நிமிடங்களில், ஊடகத் துறையின் அப்பகுதியை முற்றுகையிட்டு, காட்சிகளைப் படம் பிடித்து செய்திகளை நேரலையாக ஒளிபரப்பிக் கொண்டிருந்தனர்.

இரவு எட்டு மணி.. அக்கட்சியின் தலைமை அலுவலகம் பரபரப்பானது. கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் ஆவேசமாகக் கோஷமிட்டபடி குவிய ஆரம்பித்தனர். சிறிது நேரத்தில் கட்சியின் அவசரக் கூட்டம் தொடங்கியது.

"என்னய்யா அநியாயமா இருக்கு..? இது நம்ம தலைவரோட வளர்ச்சியப் பொறுக்க முடியாத, எதிர்க் கட்சிக்காரங்களோட சதி வேலையாத்தான் இருக்கும்.."

"இதை இப்படியே விட்டுட்டோம்னா அப்புறம் நம்மத் தலைவரோட உயிருக்கே பாதுகாப்பு இல்லாமப் போயிடும்.."

"நம்ம கட்சி சார்பா நாளைக்கே முழு அடைப்பும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தணும்.."

"நாம எது செய்தாலும், மற்ற கட்சிக்காரங்களுக்கு அது ஒரு பாடமா இருக்கணும். நம்மள சீண்டிப் பார்க்க இனி எவனும் அஞ்சணும்.."

கட்சியின் நிர்வாகிகள் அவரவர் தன் கருத்துகளைத் தெரிவித்தனர். சிறிது நேரத்தில், வாட்ஸ் அப்பில் இச்செய்தியும் வேகமாய்ப் பரவியது.

முதல் அரை மணி நேரத்திற்கு.. கட்சியின் 'பேனர்' கிழிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட செய்தி, அடுத்த சில நிமிடங்களில்.. 'பேனரில்' இருந்த தலைவரின் படத்தை கிழித்து விட்டனர் எனவும், பிறகு சில விஷமிகள் தலைவரைக் கொல்ல





BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Flugtickete und hotel kann man auch hier buchen
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
OMAN AIR
QATAR AIRWAYS
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com

முயற்சித்தனர் எனவும், கடைசியில், 'தலைவர் வெட்டிக் கொல்லப்பட்டார்' என வடிவம் மாறிமாறி வேகமாக வதந்திகள் உலவத் துவங்கியது.

நேரம் ஆகஆக இச்செய்தி காட்டுத் தீயாய்ப் பரவியது. பல இடங்களில் பயங்கர கலவரம் வெடித்தது. போராட்டம், சமூக விரோதிகள் கைக்கு மாறிப்போனது. கடைகள் சூறையாடப் பட்டன. ஆங்காங்கே வாகனங்களுக்குத் தீவைப்பு சம்பவங்களும் அரங்கேறின.

இது போதாதென்று, பழைய பகையை மனதில் கொண்டு, பழிவாங்கும் படலமாக சில இடங்களில் வெட்டுக் குத்தும் நடந்தது.

"கலவரத்திற்கு காரணம் யார்?" என உயர் போலீஸ் அதிகாரி உத்தரவுப்படி, உடனே புலன் விசாரணை துவங்கியது. பேருந்து நிலையத்தின் எதிரே இருக்கும், உணவகத்தின் வாசலில் பொருத்தப் பட்டிருந்த 'சி.சி.டி.வி கேமரா'வில் பதிவான காட்சிகள் ஆராயப்பட்டன.

அதில் பதிவாகியிருந்த காட்சிகளைப் பார்த்ததும், அன்றைய பெரும் கலவரத்திற்குக் காரணமான, 'டிஜிட்டல் பேனரை' கிழித்த மர்ம நபரை அடையாளம் கண்டனர்.

அதிகாரிகளுக்கு ஓரளவு நிம்மதி வந்தது. தாமதிக்காமல் உடனே காவல்துறை பரபரப்பானது.

மறுநாள் அதிகாலை 3.00 மணி

பேருந்துகளின் இரைச்சல் ஏதுமின்றி மயான அமைதியாய் இருந்த பேருந்து நிலைந்த்தில், கையில் ஒரு புகைப்படத்தை வைத்துக்கொண்டு அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தனர்.

ஒருவழியாக, 'கேமரா'வில் பதிவாகியிருந்த அந்த மர்ம நபரைக் கண்டுவிட்டனர். குற்றவாளி அருகே நெருங்கியதும், 'சட்'டென அதிர்ச்சியில் அனைவரும் உறைந்தனர்.

பனிக் குளிரில் நடுங்கும் ஒரு குழந்தைக்குப் பாதுகாப்பாக, கிழிக்கப் பட்ட 'அந்த பேனர்' போர்த்தப் பட்டிருந்தது. அக்குழந்தையின் அருகே, பரட்டைத் தலையும்.. பல கிழிசல்களோடு.. உடலை மறைக்கக்கூட முடியாமல் திணறிக் கொண்டிருந்த கந்தல் புடவையும் அணிந்திருந்த சாலையோர வாசிப்பெண், அரவணைப்பாய்த் தன் குழந்தையைக் கட்டியணைத்தபடி, அப்பாவியாய்ப் படுத்திருந்தாள்.





Sri Lankan Airlines
ab 799
colombo 40kg
Nishanthan
0176 2168 2149
5 STAR SERVICE
CENTURY
TRAVELS
Rheinische Str.29-44137-Dortmund
0231 58 96 557 | 0231 55 74 319
www.centurytravels.de | info@centurytravels.de

V BOX

# ONE MONTH FREE

TALK TIME TO 132 COUNTRIES, INCLUDING INDIA AND SRILANKA, FOR EVER V BOX PURCHSED IN GERMANY.

## SUPER SALE

IN GERMANY

119 €

CALL ONLY

+49 1514 6978484



